## அத்தியாயம் 11

நாமதாரகன் மிக வேட்கையுடன் ''சுவாமி ஸ்ரீ தத்தாத்ரேயர் அடுத்ததாக எங்கு அவதரித்தார். என்னென்ன லீலைகளை செய்தார். எல்லையற்ற அப்பகவானின் லீலைகளை நீங்கள் கூற, எனக்கு கேட்க வேண்டுமென்ற ஆசை பெருகிக்கொண்டிருக்கிறது'' என்றார். அதற்கு சித்தர் ''உன் போன்ற பக்தர் கிடைத்ததற்கு எனக்கு சந்தோஷமாக உள்ளது. உன்னால் எனக்கு பகவானின் லீலைகளை சொல்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. இதை நான் ஒரு பாக்கியமாக கருதுகிறேன். மேலும் கூறுகிறேன் கேள்.

ஸ்ரீபாதர் கூறியதைப் போல் அம்பிகை தன் வாழ்நாள் முழுவதும் மகேசனை பூஜை செய்து வந்தாள். பிரதோஷ வேளையில் சிவார்ச்சனை, சனிக்கிழமைகளில் வரும் திரயோதசி அன்று விசேஷ பூஜைகளுடன் சிவனை ஆராதனை செய்து வந்தாள். அவள் அடுத்த பிறவியில் மகாராஷ்டிர மாகாணம் 'காரஞ்ஜா' என்ற கிராமத்தில் வாஜசநேய பிரிவினை சேர்ந்த ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தாள். அவளுக்கு 'அம்ப' என்று பெயரிட்டார்கள். நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வந்தாள். கல்யாண பருவ வயது வந்த உடனே அந்த கிராமத்தில் மாதவன் என்ற ஒரு நல்ல பிராமண வரனை பார்த்து மணமுடித்தார்கள். மாதவன் நல்ல சிவ பக்தர். முற்பிறவியின் புண்ணியத்தாலும், கணவரின் நல்ல ஒழுக்கங்களாலும் அவள் தினமும் சிவபூஜையும் மற்ற விரதங்களும் செய்து கொண்டு மிக அன்னியோன்யமாக வாழ்ந்து வந்தார்கள். சில நாட்களில் அம்ப கர்பம் தரித்தாள். சீமந்தம் முதலிய சடங்குகள் காலாகாலத்தில் விமரிசையாக நடத்தினார்கள். பத்தாவது மாதத்தில் ஒரு நல்ல முகூர்த்த வேளையில் அவள் ஒரு ஆண் குழந்தையை பெற்றாள். தாய் தந்தையர்கள் ஆனந்தம் அடைந்தார்கள்.

கர்பத்திலிருந்து வெளிவந்தவுடனே அழுவதற்கு பதிலாக 'ஓம்'



என்ற பிரணவத்தை உச்சரித்தான். இதைக் கேட்ட எல்லோரும் ஆச்சரியமடைந்தார்கள். அக்குழந்தைக்கு 'நரஹரி' என்று பெயரிட்டார்கள். குழந்தையின் ஜாதகத்தை கணித்துப் பார்த்த ஜோதிட வல்லுனர்கள் ''மாதவாசர்மா இவன் நம்மைப் போல் இல்வாழ்க்கையில் ஈடுபட மாட்டான். இவன் நாவில் சரசுவதி தேவியும் மனதில் பார்வதி தேவியும் கைகளில் லட்சுமி தேவியும் இருக்கிறார்கள். இவனை தரிசனம் செய்தாலே எல்லா பாவங்களும் நீங்கிவிடும். மூன்று உலகத்தினராலும் வணங்கப்படுவான். பக்தர்களுக்கு சகலமும் அளிக்கக்கூடிய சக்தியுடையவராவான். இவனைப் பெற்ற நீங்கள் மிக பாக்கியசாலிகள். இவன் மந்திரமூர்த்தி பரமேசுவரரின் அவதாரம்'' என்று கூறினார்கள்.

குழந்தைக்கு தாய் பால் போதவில்லை. ஆகையால் ஒரு பசுவையோ அல்லது ஆட்டையோ வாங்க வேண்டுமென்று நினைத்தார்கள். இதற்குள் அச்சிறுவன் தன் கைகளினால் தாயின் மார்பகத்தை தொட்டான். உடனே தாய் மார்பகத்தில் பால் தாரை தாரையாக சுரக்க ஆரம்பித்தன. இதைக் கண்ட பெற்றோர்கள் ஆச்சரியப்பட்டார்கள். தங்கள் மகனின் ஸ்பரிசத்தில் மிக அற்புதமான சக்தி இருக்கிறதென்று தெரிந்து கொண்டார்கள்.

அக்குழந்தை பிறந்தவுடனே அழுவதற்கு பதிலாக 'ஓம் காரத்தை' சொன்னதை தெரிந்த மக்கள் அவனைப் பார்க்க கும்பல் கும்பலாக வந்தார்கள். இப்படி மக்கள் வருவதை பார்த்து தங்கள் மகனுக்கு திருஷ்டி கழித்தார்கள். அவன் வெகு விரைவில் நடக்கலானான். ஒரு வருட வயது வந்த பின்னும் அவன் 'ஓம்' என்ற வார்த்தையைத் தவிர வேறு எதையுமே பேசவில்லை. இதைப் பார்த்த பெற்றோர்கள் குழந்தை ஊமையோ என்று எண்ணி துன்பப்பட்டார்கள். இப்படி ஏழு வருடங்கள் கழிந்தன. ஆனால் நரஹரி ஒரு வார்த்தைக்கூட பேசவில்லை. செய்வதறியாமல் தங்கள் குலதெய்வமான தத்தாத்ரேயரை வேண்டினார்கள். சிவனை தினமும், சனிக்கிழமைகளிலும், திரயோதசி நாட்களிலும் விசேட

பூஜைகள் செய்தார்கள். ஆனாலும் நரஹரி பேசவில்லை. பெற்றோர்கள் வேதனைபட்டு துன்பமாக இருந்தார்கள். இதைப் பார்த்த நரஹரி ஒருநாள் தன் தாயை சைகையினால் அழைத்து பக்கத்திலிருந்த இரும்பைத் தொட்டான். உடனே அது தங்கமாக மாறியது. இதைப் பார்த்த தாய் ஆச்சரியப்பட்டு கணவரை அழைத்து நடந்ததை காண்பித்தாள். மாதவசர்மா தன் மகனின் இச்செயலை சோதிக்க ஒரு இரும்பு பாத்திரத்தை அவன் முன் கொண்டு வந்து வைத்தார். அதை அவன் தன் கையினால் தொட்டு தங்கமாக மாற்றினான்.

அதேபோல் நரஹரி வீட்டில் இருக்கின்ற இரும்பு பாத்திரங்களை யெல்லாம் தங்க பாத்திரங்களாக மாற்றினான். "மகனே உன் இந்த அற்புத லீலைகளை கண்டு மிக சந்தோஷமடைந்தோம். நீ ஏதோ ஒரு காரணத்திற்காக பிறந்தவன் போல் தோன்றுகிறது. இப்படிப்பட்ட உன்னை பெற்றதற்கு சந்தோஷமடைகின்றோம். ஆனாலும் உன் வாயால் எங்களை அழைக்கவில்லை. உன் அற்புதமான பேச்சை நாங்கள் கேட்கும் பாக்கியமில்லையா? நாங்கள் என்ன பாவம் செய்தோம்?" என்று துன்பப்பட்டு நரஹரியிடம் முறையிட்டனர். அதைக் கேட்ட நரஹரி தனக்கு உபநயனம் செய்து வைத்து பூணூலைப் போட்டால் பேசுவேன் என்று சைகைகளால் சொன்னான். முதலில் தாயுடன்தான் பேசுவேன் என்றும் சொன்னான்.

உடனே மாதவசர்மா பெரியோர்களை அழைத்து உபநயனத்துக்கு முகூர்த்தத்தை வைத்தார். ஊரிலுள்ள அனைவரையும் பத்திரிக்கை வைத்து உபநயனத்திற்கு வருமாறு அழைத்தார். இதைப்பார்த்த சிலர் ஊமை மூன்று வேளைகளிலும் சந்தியாவந்தனம் செய்வானா என்றும், சிலர் மாதவசர்மாவுக்கு பணம் அதிகமாக உள்ளது போல் தெரிகின்றதென்றும், பைத்தியம் பிடித்துவிட்டதென்றும், எப்படி இருந்தாலும் தங்களுக்கு விருந்து கிடைக்குமென்றும் பரிகாசம் செய்தார்கள். சிலர் மட்டும், அவர் அழைத்தார் ஆகையால் நாம் சென்று அக்குழந்தையை ஆசிர்வதித்து



வருவோமென்று கூறினார்கள்.

மாதவசர்மா மகனின் உபநயனத்திற்கு எல்லாமும் தயார் செய்து முடித்தார். கிராம மக்கள் எல்லோரும் முகூர்த்த வேளைக்கு வந்துவிட்டார்கள். உபநயனம் செய்வதற்கு முன்பு செய்ய வேண்டிய சடங்குகள் எல்லாம் செய்து முடித்தார்கள். பிறகு குழந்தையை தாயுடன் சேர்ந்து சாப்பிடச் சொன்னார்கள். பிறகு மஞ்சள் நிற ஆடையை உடுத்தினார்கள். மந்திர சகிதமாக யக்ஞோபவித்தாரணமும் (பூணூலைப் போடுவது) மொஞ்ச பந்தனமும் நடைபெற்றது. தகப்பனார் காயத்திரி மந்திரத்தை உபதேசம் செய்தார். அதை மனதிலேயே உச்சரித்தார். பிறகு முதன் முறையாக தாயிடம் பேசுவதாக கூறியிருந்ததால் தாயிடம் சென்றான். உடனே தாய் பிச்சை கேள் என்று கூறினாள். 'பவதி பிக்ஷாந்தேஹீ' என்று பிச்சை கேட்டான். "அக்னி மீளே புரோஹிதம்" என்ற ருக்வேதத்தின் முதல் ஸ்லோகத்தை சொல்லிக் கொண்டே பிச்சையை பெற்றுக் கொண்டான். இரண்டாவது முறை பிச்சையிடும் பொழுது 'இஷேத்வா' என்று ஆரம்பிக்கும் யஜுர் வேதத்தின் முதல் ஸ்லோகத்தை சொல்லிக் கொண்டே பிச்சையை பெற்றுக் கொண்டான். மூன்றாவது பிச்சை பெற்றுக் கொள்ளும்போது 'அக்னி ஆயாஹி' என்ற சாம வேதத்தை சொல்லி பிச்சையை பெற்றுக் கொண்டான். அங்கு அமர்ந்திருந்தவர்களெல்லாம் இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். பிறகு அவர் நான்காவது வேதத்தையும் படித்தான். தாய் தந்தையர்கள் மிக சந்தோஷமடைந்தார்கள். தங்கள் மகன் கடவுளின் அவதாரமே அன்றி சாமான்ய மனிதன் அல்ல என்று நினைத்து நரஹரியை வணங்கினார்கள். அப்பொழுது தாயிடம் 'அம்மா என்னை நீங்கள் பிச்சை செய் என்று சொன்னீர்கள், ஆகையால் நான் பிரம்மச்சாரியாகி வேதங்களை சொல்லிக் கொண்டு பிச்சை எடுத்து வாழ்வேன். எனக்கு அனுமதி கொடுங்கள்' என்று வேண்டினான். அதைக் கேட்ட தாய் மிகவும் துயரத்துடன் 'மகனே நீ ஏழு வருடங்கள் பேசவே இல்லை. முதன் முறையாக பேச

ஆரம்பித்தவுடனே இப்படி சொல்கிறாய். குழந்தைகள் இல்லை என்று துன்பப்பட்டுக் கொண்டிருந்த பொழுது நீண்ட நாட்கள் கழித்து நீ பிறந்தாய். உன் மழலை பேச்சுக்களை கேட்கவில்லை. அந்த ஈசனை பூஜை செய்த புண்ணியத்தால் இன்று முதல் முறையாக பேசினாய். அதைக் கேட்டு ஆனந்தப்படும் நேரத்தில் இப்படி சொல்கிறாயே, இது நியாயமா? எங்களை விட்டு சென்றால் எங்கள் கதி என்ன?'' என்று வேதனையுடன் மகனிடம் வேண்டினாள்.

அப்பொழுது நரஹரி தாயை அரவணைத்து தேற்றி, ''அம்மா என் பேச்சைக்கேள். விவேகத்துடன் சிந்தியுங்கள். உங்களின் மன வருத்தத்தை விட்டுவிடுங்கள். நான் தர்மத்தை காப்பதற்காக அவதரித்தேன். உங்களுக்கு இன்னமும் நான்கு குழந்தைகள் பிறப்பார்கள். அவர்கள் உங்களுக்கு சேவை செய்வார்கள். முற்பிறவியில் நீங்கள் மகேசனை பூஜித்து வரம் பெற்றதால் நான் உங்கள் கர்பத்தில் பிறந்தேன்'' என்று சொல்லிக் கொண்டு தன் கரத்தை எடுத்து தாயின் தலை மீது வைத்தவுடனே அவளுக்கு முற்பிறவி நினைவுகள் வந்தன. அந்த குழந்தை ஸ்ரீபாத வல்லபரை போல் காட்சியளித்து, தனக்கு வரமளித்தது தெரிந்தது. உடனே அவன் பாதங்களில் விழுந்து வணங்கினாள். அப்பொழுது அவன் தாயை எழுப்பி தேற்றி "அம்மா இங்கு நடந்ததை யாரிடமும் கூற வேண்டாம். நான் கூறுவதை மிக ரகசியமாக வைத்துக் கொள்ளுங்கள். நான் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட முடியாது. நான் சன்னியாசியாக வாழவேண்டும். நான் தீர்த்த யாத்திரைகள் மற்றும் பல காரியங்கள் செய்ய வேண்டும். அவை நான் சொல்ல முடியாது. ரகசியமானவை. இப்பணி நான் செய்தாக வேண்டும். ஆகையால் நீங்கள் எனக்கு அனுமதி கொடுங்கள்'' என்றான்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 12

அப்பொழுது அந்த தாய் ''மகனே பன்னிரெண்டு வருடங்கள் பிரம்மச்சாரியாக வாழ்ந்து, பிறகு கல்யாணம் செய்துக் கொண்டு பிள்ளைகளை பெற்று இல்லற வாழ்வை அனுபவித்து யக்ஞ, யாகங்களை செய்து புண்ணியத்தை பெற்ற பிறகு, இறுதியில் சந்நியாசியாக வேண்டுமே தவிர நீ இப்படி ஏதோ வைராக்கியத்துடன் சந்நியாசியாவது தவறல்லவா'' என்று வேண்டினாள்.

அதைக் கேட்ட நரஹரி ''அம்மா இந்த உடல் நிரந்தரமானதல்ல. நீர்க்குமிழ் போல் சீக்கிரமாக அழியக்கூடியது. மரணம் இல்லை என்பவன் எவனும் கிடையாது. மரண தேவதையான எமன் ஜீவிகளை தொடர்ந்துக் கொண்டே இருப்பான். மனிதனுக்கு தன் வாழ்க்கை எப்பொழுது முடியுமென்று தெரியாது. கடன் கொடுத்தவன் தன் கடனை திரும்பி பெறும் நேரத்திற்காக நாட்களை எண்ணிக் கொண்டிருப்பதைப் போல் மரண தேவதை கூட மனிதர்களின் வாழ்நாளை எண்ணிக் கொண்டிருப்பான். இரவு, பகல் நம் வாழ்நாளை குறைத்துக் கொண்டே வரும். இந்த உடல், மனைவி, மக்கள், மணை, செல்வம், வாழ்க்கை, நிரந்தரமென்று நினைத்துக் கொண்டு வாழ்பவன் அறிவில்லாதவன். கடந்த காலம் திரும்பி வராது. நிகழ்காலத்தை நினைக்க முடியாது. ஆகையால் உடல் திடமாக உள்ள பொழுதே தர்மங்களை செய்ய வேண்டும். எந்த நாள் புண்ணியம் செய்யாமல் கழிக்கின்றோமோ அந்த நாள் நம் வாழ்க்கையில் வீணாக கழிந்த நாளென்று நினைக்க வேண்டும். எந்த ஒரு பொருள் மேலும் மமதையை வைப்பது ஆத்ம வஞ்சனை ஆகும். துயரத்தை பெற நேரிடும். ஆசை என்ற மாயையில் சிக்கி பிறந்தவர்களுக்கு நீ சொல்லும் சம்சார வாழ்க்கைக்கு பிறகு சந்நியாசியாக செல்வது உசிதம். நான் சகலமும் துறந்து சில காரணங்களுக்காக பிறந்தவன். ஆகையால் நான் சந்நியாசியாக செல்வதை தடுக்காதீர்கள்'' என்று ஞானோபதேசத்தை செய்தான். இதைக் கேட்ட அந்த தாய் வியப்புடன்

பார்த்தாள். அவனை வணங்கி ''மகனே என் அறியாமையினால் உன்னை என் மகன் என்று நினைத்து அப்படி கூறிவிட்டேன். நீ எங்களை ஆட்கொள்ள பிறந்த தெய்வம். உலகத்தில் தர்மத்தை நிலைக்க அதர்மத்தை அழிக்க பிறந்தவன். ஆகையால் உன் செயலை தடுக்கமாட்டேன். ஆனால் உன் இந்த திவ்ய ரூபத்தை என் மனதில் நிலைக்கும்படி செய். நீ சென்று விட்டால் நான் யாரைப் பார்த்து என் மகன் என்று சந்தோஷப்படுவேன். எனக்கு இன்னமும் குழந்தைகள் பிறப்பார்கள் என்று கூறினாய். எனக்கொரு மகன் பிறக்கிற வரையிலாவது நீ எங்களுடன் இருக்க வேண்டும். அது வரையிலும் சந்நியாசி ஆக அனுமதி கொடுக்க மாட்டேன். என் சொல்லை கேட்காமல் நீ சென்று விட்டால் நான் மரணமடைவேன்'' என்று வேண்டினாள். அப்பொழுது நரஹரி "அம்மா உங்களுக்கு ஒரு வருட காலத்திற்குள் இரட்டையர்கள் பிறப்பார்கள். அதற்கு பிறகு நான் சந்நியாசியாக செல்ல அனுமதியளிக்கவேண்டுமென்று" வாக்குறுதியை பெற்றான்.

அவனை மகேசனைப் போல் பாவித்து பெற்றோர்கள் தினமும் அர்ச்சனை செய்து வந்தார்கள். வேதங்களை படித்தவர்களும் இவரிடம் வந்து சகல சாத்திரங்களை கற்று கொண்டு சென்றனர். பாமர மக்களுக்கு தர்ம சாத்திரங்களை கூறிக் கொண்டிருந்தார். இதனிடையில் தாய் கர்ப்பம் தரித்தாள். ஒரு வருடம் சென்றுவிட்டது. அவள் இரண்டு ஆண் குழந்தைகளை பெற்றெடுத்தாள். பெற்றோர்கள் மிக சந்தோஷமடைந்தார்கள். அக்குழந்தைகளுக்கு மூன்று மாதம் வயதான நேரத்தில் ஸ்ரீநரஹரி தாயிடம் சென்று "அம்மா உங்கள் ஆசை நிறைவேறியது. இந்த இருவரும் பூர்ண ஆயுளுடன் வாழ்வார்கள். இன்னமும் இரு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் பிறப்பார்கள். நீங்கள் சுகத்துடன் வாழ்வீர்கள். ஆகையால் நான் செல்வதற்கு அனுமதி கொடுங்கள்" என்று கேட்டார். பெற்றோர்கள் அவரை வணங்கி ''மகனே நாங்கள் எங்கள் அறியாமையினால் உன்னை எங்கள் மகனென்று நினைத்தோம். நீ



எங்கள் குலதெய்வம். உலகத்தை ஆட்கொள்ள பிறந்தவர். எங்கள் மகனென்று நினைத்து உன்னை திட்டியிருந்தால் எங்களை மன்னித்துவிடு. எங்கள் பிரதோஷ பூஜையின் காரணமாக (பலனாக) நீ எங்களுக்குப் பிறந்தாய். இனி எங்களுக்கு துன்பங்கள் நேராமல் ஆசீர்வதியுங்கள். நீங்கள் எங்களை விட்டு செல்கிறீர்கள். உங்களைப் பார்க்காமல் நாங்கள் எப்படி வாழ முடியும்?'' என்று கதறினார்கள். அதை கேட்ட ஸ்ரீநரஹரி ''நீங்கள் என்னை பார்க்க வேண்டுமென்று நினைத்தவுடனே உங்களுக்கு என் தரிசனம் கிடைக்கும். இனிமேல் உங்கள் வீட்டில் ''இல்லை'' என்பதிருக்காது. லட்சுமி தேவி இங்கு குடிகொண்டிருப்பாள். மரணமடைந்தபின் நீங்கள் கைலாசம் செல்வீர்கள். இனி உங்களுக்கு மறுபிறவி கிடையாது. நான் தீர்த்த யாத்திரைகள் செய்து கொண்டு முப்பது வருடங்களுக்கு பிறகு மீண்டும் இக்கிராமத்திற்கு வந்து உங்களுக்கு தரிசனம் தருவேன்'' என்று தாய் தந்தையர்களுக்கு ஆறுதல் கூறி வடதிசை நோக்கி புறப்பட்டார். அவருடன் பெற்றோர்கள், ஊர்மக்களும் வழியனுப்ப ஊர் எல்லை வரையிலும் வந்தார்கள். எல்லோரும் அவரை வணங்கினார்கள். பிறகு ஊர் மக்கள் சென்ற பிறகு பெற்றோர்கள் அவரை பிரிய முடியாமல் அப்படியே நின்றுவிட்டார்கள். அப்பொழுது அவர் அவர்களுக்கு ஸ்ரீதத்தாத்ரேயராகவும், ஸ்ரீபாதஸ்ரீவல்லபராகவும் தரிசனம் தந்து ஆசீர்வதித்தார். அவர்கள் அவருக்கு சாஸ்டாங்கமாக நமஸ்காரம் செய்து மிக ஆனந்தப்பட்டு தாங்கள் செய்த சனிப்பிரதோஷ பூஜையினால் தங்களுக்கு இப்பாக்கியம் கிடைத்ததென்று கூறி, மீண்டும் உங்கள் தரிசனம் எங்களுக்கு கிடைக்கவேண்டுமென்று வேண்டினார்கள். அவர் கண்டிப்பாக மீண்டும் உங்களுக்கு தரிசனம் தருகிறேன் என்று உறுதியாக கூறிவிட்டு அவர்களை அனுப்பிவிட்டார்.

பிறகு அவர் பத்ரிநாத்தை நோக்கி புறப்பட்டு வழியில் காசி நகரத்திற்கு வந்து சேர்ந்தார். முதலில் அவர் கங்கையில் நீராடி ஆத்மரூபமான காசி விஸ்வநாதரை தரிசித்தார். பிறகு ஒரு சிறந்த

இடத்தை தேர்ந்தெடுத்து யோக முத்திரையில் அமர்ந்து பிராண வாயுவை ஸ்தம்பனை செய்து தவம் செய்யலானார். நரஹரி மூன்று வேளைகளிலும் மணிகர்ணிகா கட்டத்தில் நீராடி வருவதுண்டு. காசியில் பல யதிகள், சந்நியாசிகள், தவம் புரிந்தவர்கள், அவதூதர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அவரை பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். சிறு வயதிலேயே இப்படிப்பட்ட வைராக்கியம், கடினமாக தவம் செய்வதை பார்த்து அவர் ஒரு அவதார புருஷன் என்று நினைத்து அவரை வணங்கி வந்தார்கள். அங்கு யதிகளில் வயோதிகரான கிருஷ்ண சரசுவதி அவரை பக்தியுடன் வணங்கி கொண்டிருந்தார்.

அவர் ஒரு அவதார புருஷன் என்றும், சந்நியாச நெறிகளை மெய்ப்படுத்த பிறந்தவரென்றும், விஸ்வகுரு என்றும், ஆனால் உலகை ஆட்கொள்ள பிறந்தவரானதால் அவர் நெறிகளை தவறாத சந்நியாசியைப் போல் தவம் செய்கிறாரென்றும், ஆகையால் வயதில் சிறியவராயினும் ஞானத்தில் பெரியவராகையால் அவரை நாம் வணங்குவதில் தவறேதுமில்லை என்றும் கிருஷ்ண சரசுவதி கூறினார். இவர் நம்மைப்போல் சந்நியாசம் பெற்றால் நாம் இவரை பூஜை செய்யலாம் என்று கூறி அவர் சீடர்களில் ஒருவரை அவரிடம் அனுப்பினார். சீடர் சென்று ''சுவாமி நீங்கள் அந்த மகேசனே அன்றி வேறு யாருமில்லை. நல்லோர்களையும், தர்மத்தையும் காப்பதற்காக பூமியில் அவதரித்தீர். ஸ்ரீ ஆதிசங்கரர் நிறுவிய சந்நியாச நெறி அழிந்து கொண்டே வருகின்றது. அதை நீங்கள் நிலைநாட்டி பெறுகச் செய்யவேண்டும். சந்நியாசிகளான நாங்கள் உங்களை இப்பொழுது பூஜை செய்தால் உலகம் நிந்திக்கும். நீங்களும் சந்நியாசியானால் நாங்கள் உங்களை சேவிக்கலாம்'' என்று கூறினார்.

அவர்களின் விருப்பப்படியே நன்னெறிகளை நிலைநாட்ட கிருஷ்ணசரசுவதியை குருவாக ஏற்றுக் கொண்டு அவரிடம் சந்நியாசம் பெற்றார். குரு அவர்கள் அவருக்கு 'ஸ்ரீநரசிம்ம சரசுவதி' என்று பெயரிட்டார். அதற்கு பிறகு ஸ்ரீ சுவாமிகள் காசியில் சில நாட்கள் தங்கி வேதங்களை பற்றி வேதத்தின் அர்த்தத்ததை பற்றியும் பக்தர்களுக்கு கூறினார்.



அதுவரையிலும் குருவின் கதையை கேட்டுக் கொண்டிருந்த நாமதாரகன், சித்தரை பார்த்து ''ஸ்ரீநரசிம்ம சரசுவதி அவர்கள் மும்மூர்த்திகளின் அவதாரமான சத்குரு என்று கூறினீர்களே பிறகு அவர் ஏன் ஒரு குருவிடம் சந்நியாசம் பெறவேண்டும்?'' என்று கேட்டான். ஸ்ரீ ராமபிரான் கடவுள் அவதாரமானாலும் அவர் வசிஸ்டரை குருவாக ஏற்றுக் கொள்ளவில்லையா? அப்படியே சாந்தீபனுக்கு சீடராக ஸ்ரீகிருஷ்ண பகவான் இருந்தார். ஆகையால் மும்மூர்த்திகளின் அவதாரமான ஸ்ரீநரசிம்ம சரசுவதி ஸ்ரீகிருஷ்ண சரசுவதியை குருவாக ஏற்றுக் கொண்டார் என்று கூறினான். ''அப்படியானால் இக்குரு சம்பரதாயத்தை விவரமாக கூறுங்கள் கேட்க ஆவலாக உள்ளது'' என்று வேண்டினான். சித்த முனிவர் "முதற்குரு சதாசிவன் அவர் சீடர் விஷ்ணு. விஷ்ணுவின் சீடர் பிரம்ம தேவர், அதற்கு பிறகு பிரம்மாவிற்கு வசிஸ்டர் - சக்தி - பராசரர் - வியாசர் - சுகர் - கௌடபாதர் - கோவிந்த பகவத்பாதர் - சங்கர பகவத்பாதர் - விஸ்வரூபர் - போத ஞானகிரி - மலயா நந்தர் - யாதவேந்திர ஸரஸ்வதி - பிறகு கிருஷ்ண சரசுவதி. இந்த கிருஷ்ண சரசுவதி சுவாமிகள்தான் சத்குருவாகிய ஸ்ரீநரசிம்ம சரசுவதி அவர்களின் குரு ஆவார்'' என்று கூறினார். ஸ்ரீ குரு அங்கு சில காலம் தங்கி பலபேரை சீடர்களாகப் பெற்று புண்ணியத்தலங்களை தரிசிக்க சீடர்களுடன் புறப்பட்டார். அவர் முதலில் பதரிகாஸ்மரத்திற்கு சென்று அங்கிருந்து மேரு மலையை வலம் வந்து, எல்லா சேத்திரங்களையும் தரிசனம் செய்து புண்ணிய நதிகளில் நீராடி கங்கா சாகர சங்கமத்தை வந்து சேர்ந்தார். அங்கிருந்து பிரம்ம சேத்திரமான பிரயாகைக்கு வந்தார். அங்கு அவருக்கு பலபேர் சீடர்களாக ஆனார்கள். அங்கு அவர் மாதவன் என்ற பிராமணனுக்கு தத்துவமுபதேசித்து சந்நியாசமளித்தார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 13

நாமதாரகன் சித்தமுனியிடம் கைகூப்பி வணங்கி தாழ்மையுடன் "சித்தமுனி அவர்களே, புல் நிறைந்த வயலில் மேயும் பசுவுக்கு வெளிவர மனமிருக்காது. அதேபோல் எனக்கும் இக்குரு சரித்திரத்தை கேட்க கேட்க மேலும் கேட்கவேண்டுமென்ற ஆவல் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. அறியாமையினால் மூடனாக உள்ள என்னை குரு சரித்திரமென்ற அமுதத்தை பருக வைத்து என்னுள் ஞான ஜோதியை ஏற்றிவிட்டீர்கள். கற்பக விருட்சத்தையும், சிந்தாமணியையும், ஞானத்தையும் கொடுத்தவர்களுக்கு என்ன கைமாறு செய்து அந்த உபகாரத்தை தீர்த்துக்கொள்ள முடியும். உங்களின் இந்த போதனையினால் என்னுள் குருபக்தி ஸ்திரமாகி விட்டது. என் மனதிற்கு சாந்தி கிடைத்துவிட்டது. பிறகு என்ன நடந்ததென்று கூறுங்கள்" என்று வேண்டினான்.

"சீடரே நீ தன்னியனானாய். ஸ்ரீகுருவின் பாதங்கள் உன் இதயத்தில் குடி கொண்டு விட்டன. ஆகையால் இப்படி வேண்டுகிறாய். இதனால் நீ மட்டுமின்றி பிறரும் நன்மை அடைகிறார்கள். உனக்கு சொல்லச் சொல்ல எனக்கும் சந்தோஷமாக உள்ளது. பிறகு நடந்ததை கூறுகிறேன்" கேள் என்றார்.

"அவர் பிரயாக சேத்திரத்தில் இருந்த பொழுது அவர் புகழ் மேலும் அதிகரித்தது. அவருக்கு பலபேர் சீடர்களானார்கள். அவர்களில் பாலசரசுவதி, கிருஷ்ணசரசுவதி, சதானந்த சரசுவதி, ஞான ஜோதி சரசுவதி, சித்த முனிவர் என்ற நான் மிக முக்கியமானவர்கள். ஸ்ரீகுரு தேவர் எங்களையும் இன்னமும் சில சீடர்களையும் சேர்த்துக் கொண்டு, புண்ணிய நதிகளில் நீராடியும் தெற்கு திசையை நோக்கி பயணம் செய்து அவரின் பிறந்த இடமான 'காரன்ஜா' நகரத்திற்கு வந்தார்கள். அவர் வருகையால் பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள் ஆனந்தமடைந்தார்கள். ஊர் மக்களெல்லாம் அவரை தரிசித்து பூஜை



செய்தார்கள். பிராமணர்கள் எல்லாம் அவர்கள் வீட்டுக்கு பிச்சைக்கு வரும்படி வேண்டினார்கள். எல்லோருக்கும் அப்படியே வருகிறேன் என்று கூறி, அனைவர்கள் வீடுகளுக்கும் ஒரே வேளையில் பல ரூபங்களில் சென்று பிச்சை கேட்டார். இந்த லீலையை அறிந்து ஆச்சரியப்பட்டு அவர் மும்மூர்த்திகளின் அவதாரம்தான் என்று அறிந்தார்கள்.

ஒரு நாள் பெற்றோர்களுக்கு அவர் ஸ்ரீபாதர் ரூபத்தில் காட்சி அளித்தார். உடனே அவர்களுக்கு முற்பிறவியின் நினைவு தெரிந்து அவர் பாதங்களை தொட்டு வணங்கி, நாங்கள் கடந்த ஜென்மத்தில் செய்த சனி பிரதோஷ பூஜையின் மகிமையினால் எங்களுக்கு நீங்கள் மகனாக பெறும் பாக்கியம் கிடைத்ததென்று அவரை போற்றினார்கள். அப்பொழுது அந்த தம்பதிகள் எங்களை இந்த இல்லற வாழ்க்கையிலிருந்து காப்பாற்றும்படி வேண்டினார்கள்.

அதற்கு அவர் எவனொருவன் சந்நியாசம் பெற்றானோ அவனின் நான்கு தலைமுறைகளும் நற்கதி பெறுவார்கள். அந்த வம்சத்திற்கு மரண பயமிருக்காது. முன் நரகத்திற்கு சென்றவர்கள் கூட சொர்க்கத்திற்கு செல்வார்கள். நான் உங்களுக்கு பிறந்ததினால் உங்களுக்கு பிரம்மபதம் கிடைக்கும். உங்கள் குழந்தைகள் நிறைய ஆயுள் பெற்று, சகல செல்வங்களுடன் சுகத்துடன் வாழ்வார்கள். நீங்கள் உங்களின் பேரக் குழந்தைகளை பார்ப்பீர்கள். இங்கு எல்லா இன்பங்களை அனுபவித்து வாழ்க்கை முடியும் நேரத்தில் காசிக்கு சென்று அங்கு மரணமடைந்து முக்தி பெறுவீர்கள்" என்று ஆசீர்வதித்தார்.

அப்பொழுது அவர் தங்கையான 'ரத்னா' அவரை வணங்கி சத்குரு பிரபுவே எனக்கு இந்த சம்சார பந்தத்தை தவிர்த்து தவம் செய்ய அனுமதி வழங்க வேண்டுமென்று வேண்டினாள். அவர் புன்னகைத்து "அம்மா பெண்களுக்கு தவம் செய்ய வேண்டியதில்லை. கணவனுக்கு சேவை புரிந்தாலே நற்கதி

அடைவார்கள். பதி சேவையினால் எல்லா ஆசைகள் நிறைவேறும். அவளின் பதிவிரதா மகிமையினால் மகேசன் சந்தோஷமடைந்து அவளுக்கு நற்கதி கொடுப்பார். ஆகையால் பெண்களுக்கு இது ஒன்றுதான் நல்வழியென்று வேதங்கள் கூறுகின்றன'' என்றார். அதற்கு அவள் "சுவாமி நீங்கள் இருகாலங்களையும் அறிந்தவரானதால் அடுத்த பிறவியில் எனக்கு என்ன நடக்குமென்று கூறுங்களென்று'' வேண்டினாள். அதைக் கேட்ட சுவாமிகள் "அம்மா உன்னுடைய வாழ்க்கை சுகமானதல்ல. முற்பிறவியில் (முன் ஜென்மத்தில்) நீ ஒரு பசுவை காலால் உதைத்தாய், உன் அண்டை வீட்டு தம்பதிகளை பிரித்தாய். இந்த இரண்டு தவறு (வினை)களின் பலன் இப்பொழுது நீ அனுபவிக்க வேண்டும். பசுவை உதைத்தற்காக உனக்கு தொழுநோய் வரும். தம்பதிகளை பிரித்ததற்காக உன் கணவன் உன்னை விட்டு சென்று சந்நியாசியாகிவிடுவார்'' என்றார். இதைக் கேட்ட அப்பெண் அழுது கொண்டே குருவின் கால்கள் மீது விழுந்து "சுவாமி என்னை மன்னித்து இந்த துன்பங்களிலிருந்து என்னை காப்பாற்றுங்கள்'' என்று வேண்டினாள். அப்பொழுது சுவாமிகள் அவளை தேற்றி "அம்மா உனக்கு வயது முதிர்ந்த காலத்தில்தான் உன் கணவன் உன்னை பிரிந்து செல்வார். அப்பொழுது உனக்கு தொழுநோய் வரும். நீ உடனே அமரஜ, பீமா நதி கரையிலுள்ள காணகாபூர் சேத்திரத்திற்கு வா. அங்கே உனக்கு என் தரிசனம் கிடைக்கும். அங்குள்ள பாபவினாச தீர்த்தத்தில் நீராடினால் உன் தொழுநோய் மறையும்'' என்று ஆறுதல் கூறி, சீடர்களுடன் அங்கிருந்து புறப்பட்டு கோதாவரி நதியின் ஆரம்ப இடமான நாசிக்கை வந்தடைந்தார்கள். நாமதாரக இந்த நாசிக்கின் மகிமையை கூறுகிறேன் கேள்.

முன்னொரு காலத்தில் இங்கே கௌதமர் என்ற மாமுனிவர் வாழ்ந்து வந்தார். அப்பொழுது அங்கு வறட்சி ஏற்பட்டது. அப்பொழுது அங்கே இருந்து தவம் செய்து கொண்டிருந்த முனிவர்களுக்கெல்லாம் உணவுக்கு கஷ்டமாகிவிட்டது. ஆகையால் அவர்கள் கௌதமரை



பார்த்து ஏதாவது ஒரு உபாயம் கூறும்படி வேண்டினார்கள். அதற்கு அவர் பயப்பட வேண்டாமென்று கூறி தன் தவசக்தியினால் காலையில் நெல்லை விதைத்து தவத்துக்கு சென்று விடுவார். மத்தியான நேரத்திற்கெல்லாம் அது பயிராகிவிடும். அதை அறுவடை செய்து அந்த தானியத்தை சாப்பிட்டு வந்தார்கள். இப்படி இருக்கையில் ஒருநாள் முனிவர்களெல்லாம் கூடி இங்கு மழையில்லை. தண்ணீருக்கு பஞ்சமாக உள்ளது. நாம் குடிப்பதற்கு கூட நீர் இல்லை. ஆகையால் சிவனிடமிருந்து கங்கையை பூமிக்கு வரவழைத்தால் நமது கஷ்டங்களெல்லாம் தீர்ந்துவிடும். மேலும் புனித கங்கையில் ஸ்நானம் செய்வதினால் புண்ணியமும் கிடைக்கும். இதை செய்வதற்கு மாமுனிவர் கௌதமர்தான் உகந்தவர். அவருக்கு நாம் ஏதாவதொரு துன்பத்தை ஏற்படுத்தி அதை தீர்க்க கங்கையை பூமிக்கு கொண்டு வர வேண்டுமென்று கூறுவோம், அவர் பெரும் சிவபக்தர். ஆகையால் அவர் சிவபெருமானை வேண்டி தவம் புரிந்து கங்கையை பூமிக்கு கொண்டு வருவார்'' என்று யோசனை செய்து கௌதமர் நெற்பயிரை விதைத்து தவத்திற்கு சென்ற பிறகு தர்பைகளால் பசுவையும், கன்றையும் செய்து தங்களின் தவத்தின் சக்தியினால் அதற்கு உயிரூட்டி நெற்பயிரை விதைத்த வயலில் விட்டு விட்டார்கள். கௌதமர் வயலில் பசுவை பார்த்து அதை விரட்ட தர்பையை வீசினார். தர்பை பசுவின் மேல் விழுந்தவுடனே அது மரணமடைந்தது. உடனே முனிவர்களெல்லாம் கௌதமரிடம் சென்று பசுவை கொன்ற பாவத்தைப் போக்க கங்கையை பூமிக்கு வரவழைத்து அதில் நீராடவேண்டுமென்று கூறினார்கள். கௌதமர் அதை ஒப்புக் கொண்டு தவம் செய்து மகேசனின் அனுகிரகத்துடன் கங்கையை பூமிக்கு கொண்டு வந்தார். ஆகையால் இந்த நதிக்கு கௌதமியென்றும், கோஹத்தியா பாவத்திலிருந்து கௌதமரை விடுவித்ததால் கோதாவரி என்றும் பெயர் வந்தது. இப்படி புகழ் பெற்று பவித்திரமான நதி என்பதால் ஸ்ரீசத்குரு இங்கு வந்தார். அவர் கோதாவரியில் நீராடி அந்த நதிக்கரையின் இருபுரங்களிலிருக்கும்

புண்ணியத்தலங்களை தரிசித்து 'மஞ்சரீகம்' என்ற இடத்திற்கு வந்தார். அங்கே 'மாதவாரண்யன்' என்ற முனிவர் தினமும் தனது இஷ்ட தெய்வமான ஸ்ரீநரசிம்ம சுவாமியை மனதில் நினைத்துக் கொண்டு பூஜை செய்து வந்தார். ஆனால் ஒருநாள் அவருக்கு நரசிம்ம பகவானுக்கு பதிலாக சத்குரு ஸ்ரீநரசிம்ம சரசுவதி மனதில் தோன்றினார். அவர் பூஜையை முடித்துக் கொண்டு வெளியில் வர அவருக்கு ஸ்ரீ சத்குருவே தரிசனம் தந்தார். அவர் மிக ஆச்சரியப்பட்டு சுவாமிகளின் கால்களின் மேல் விழுந்து மெல்லிய குரலில் "நான் பூஜிக்கும் அந்த நரசிம்ம சுவாமிகள் நீங்கள்தான். இன்று உங்கள் பாதங்களை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. நான் தன்னியனானேன்" என்று கூறினான். "எங்கள் தரிசனத்தால் உன் சேவை பலித்தது. உன் பக்திக்கு நான் சந்தோஷமடைந்தேன். இன்று முதல் எங்களையே தியானம் செய்துக் கொண்டிரு" என்று கூறி தன் திவ்ய ரூபத்தை அவருக்கு காண்பித்தார். மாதவாரண்யன் பரவசத்தால் சத்குருவை இப்படி துதித்தார். "ஹே ஜகத்குரு! உங்களுக்கு ஜயமுண்டாகட்டும். மனிதரைப் போல் காண்பித்தாலும் நீங்கள் மும்மூர்த்திகளின் அவதாரமே. உலகை காப்பதற்காக வந்த பரம்பொருள் நீர்தான். இந்த உலகின் ஜோதி சொரூபன் நீங்களே" என்றார். "மாதவாரண்யா நீ தினமும் எங்களின் ரூபமான ஸ்ரீநரசிம்ம சுவாமியை பூஜை செய்ததினால் எனது தரிசனம் கிடைத்தது. உனக்கு பிரம்மபதம் கிடைக்கும்" என்று ஆசீர்வதித்து, அங்கிருந்து கோதாவரி நதிக்கரையில் இருக்கும் வாசர பிரம்மேசுவரி சேத்திரத்திற்கு வந்தார்கள். கோதாவரியில் குளிப்பதற்காக நதிக்கரைக்கு சென்றார்கள். அங்கு ஒரு பிராமணன் வயிற்றுவலியால் அவதிப்பட்டு தரையில் புரண்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் நான் மகா பாவி. என் போன்றோர் இந்த உலகத்தில் வாழ்வதால் பிரயோஜனம் கிடையாது. வாழ்வதற்கு உணவு தான் முக்கியம். உணவு உண்ணாமல் யாராலும் வாழமுடியாது. அந்த உணவே எனக்கு பகையானது. ஆகையால் நான் வாழ்வதைவிட



மரணமடைவதே மேலென்று நினைத்து ஒரு பெரிய பாறாங்கல்லை தன் வயிற்றில் கட்டிக் கொண்டு பகவானை நினைத்து தேவா நான் இந்த பூமிக்கு சுமையானேன். போன ஜென்மத்தில் யாருக்கும் அன்னதானம் செய்யவில்லையோ? பிராமணனின் சாப்பாட்டை திருடினேனோ? பசு மேய்ந்துக் கொண்டிருக்கையில் அதை விரட்டினேனோ? நன்றியை மறந்தேனோ? கடவுளை பூஜிக்கவில்லையோ? குருக்களை நிந்தித்தேனோ? தாய் தந்தையர்களை அவமானம் செய்தேனோ? வீட்டிற்கு வந்த விருந்தாளியை அவமதித்து அனுப்பினேனோ? காடுகளுக்கு தீயிட்டேனோ? தாய் தந்தையர்களை விட்டு மனைவியுடன் வேறு குடித்தனம் சென்றேனோ? வேறென்ன பாவங்கள் செய்தேனோ தெரியவில்லை, அந்த பாவங்களினால் நான் இந்த கஷ்டத்தை அனுபவிக்கிறேன். தெய்வமே என்னை காப்பாற்று என்று வேண்டிக் கொண்டே நதியில் குதிக்கலானான். அப்பொழுது அதைப் பார்த்த ஸ்ரீகுரு அவர்கள் சீடர்களிடம் "எவனோ தற்கொலை செய்வதற்காக நதியில் விழப் பார்க்கிறான். உடனே சென்று அவனை தடுத்து கரைக்கு கொண்டு வாருங்களென்று" கூறினார்.

சீடர்கள் ஓடிச்சென்று அவனைப் பிடித்து குருவிடம் கொண்டுவந்தார்கள். அப்பொழுது ஸ்ரீகுரு "ஏ ! பிராமணனே தற்கொலை செய்துக் கொள்வது மகாபாவம். ஏன் நீ நதியில் விழுந்து மரணமடைய பார்த்தாய்" என்று கேட்டார். அப்பொழுது அவன் "யதீச்வர! நான் என்ன சொல்வேன். நான் இந்த பூமிக்கு சுமையானேன். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அல்லது மாதத்திற்கு ஒரு முறை சாப்பிட்டாலயே வயிற்று வலியால் அவதிப்படுகிறேன். அந்த துயரை தாங்கமுடியாமல்தான் தற்கொலை செய்ய முனைந்தேன். வாழ்வதற்கு உணவுதான் முக்கியம். ஆனால் அந்த உணவு எனக்கு பகையானது. இனி நான் வாழ்வதெப்படி" என்றான். அப்பொழுது ஸ்ரீசத்குரு "மகனே நீ பயப்படவேண்டாம். உன் துயரம் இன்றுடன் தீர்ந்துவிட்டது. நீ விருந்து சாப்பாடு

சாப்பிடலாம்'' என்று சொல்லும் பொழுது அந்த கிராமத்தின் அதிகாரியான ஒரு பிராமணன் நதியில் குளிப்பதற்காக அங்கு வந்தார். அவர் சத்குருவை பார்த்தவுடனே பக்தியுடன் குருவை சமீபித்து அவர் பாதங்களை தொட்டு ஸாஸ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான்.

அப்பொழுது பகவான் அவரைப் பார்த்து ''உன் பெயரென்ன? உன் இருப்பிடம் எது?'' என்று கேட்டார். அதற்கு அவர் ''அய்யா நான் ஆபஸ்தம்ப பிரிவை சேர்ந்தவன். பிராமணன், கௌண்டிண்ய கோத்திரத்தில் பிறந்தவன். என் பெயர் சாயம்தேவன். எங்கள் ஊர் காஞ்சிபுரம். வயிற்று பிழைப்புக்காக இந்த கிராமத்தின் மன்னனான ஒரு முகம்மதீயரிடம் வேலை செய்கிறேன். இங்கு நான் ஒரு வருட காலமாக பணிபுரிகிறேன். இன்று எனக்கு உங்கள் தரிசனம் கிடைத்துவிட்டது. நான் தன்னியனானேன். நான் செய்த பாவங்களெல்லாம் உங்கள் தரிசனத்தால் போய்விட்டன. தங்களுடைய அனுக்கிரகத்தால் இந்த சம்சாரக்கடலை எளிதில் தாண்டிவிடலாம். கங்கையில் நீராடினால் பாவங்கள் தொலைகின்றன. சந்திர தரிசனத்தால் உள்ளம் குளிர்கிறது. கற்பக விருட்சத்தால் எல்லா கோரிக்கைகளும் நிறைவேறுகின்றன. ஆனால் உங்களைப் போன்ற மகான்களை தரிசித்தால் எல்லாமும் பெற்று நான்கு புருஷார்த்தங்களும் பெறுகிறோம்'' என்று துதித்து வணங்கினான். அப்பொழுது சுவாமிகள் அவரை ஆசிர்வதித்து பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு இப்படி கூறினார்.

''நீ இந்த பிராமணனை உன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போ. இவனுக்கு வயிற்றுவலி வியாதி இருக்கிறது. சாப்பிடாமல் எப்படி வாழ்வான். இவன் வியாதிக்கு விருந்து சாப்பாடுதான் மருந்து. ஆகையால் நீ இவனுக்கு நல்ல சாப்பாடு கொடு'' என்றார். இதைக்கேட்ட சாயம்தேவன் ஆச்சர்யப்பட்டு ''சத்குருவே இவன் ஒரு மாதத்திற்கு பிறகு நேற்றொருநாள் சாப்பிட்டதற்கே வயிற்றுவலி தாங்காமல் அவதிப்பட்டு தற்கொலை செய்து கொள்ள சென்றான். இவனுக்கு சாப்பாடு போடுவதால் எனக்கு



பிரம்மஹத்தியா பாதகதோசம் நேரிடுமோ என்று பயமாக இருக்கிறது'' என்றார். இதைக்கேட்ட பகவான் சிரித்து ''அப்படியானால் இன்னமும் நல்ல மருந்தை சொல்கிறேன் கேள். என்னை மிஞ்சிய வைத்தியனில்லை. இவனுக்கு வடை பாயாசத்துடன் கூடிய உணவுதான் சிறந்த மருந்து. நீ சந்தேகிக்காமல் இவனை கூட்டி சென்று நான் கூறியது போன்ற உணவைக் கொடு'' என்றார். சாயம்தேவன் ஸ்ரீநரசிம்ம சரசுவதிக்கு வணக்கம் செலுத்தி சீடர்களுடன், அவரை தன் வீட்டிற்கு பிச்சைக்கு அழைத்தார்.

அப்பொழுது ஸ்ரீகுருவுடன் எல்லோரும் சாயம்தேவன் வீட்டிற்கு சென்றோம். அந்த புண்ணிய தம்பதிகள் அலங்கரித்த மேடையில் ஆசனங்களை அமர்த்தி ஸ்ரீகுருவையும் மற்றவர்களையும் அமரச் செய்து ஆறுவிதமான பூஜைகளுடன் ஸ்ரீகுருவை பூஜித்து, ஸ்ரீகுருவின் பாதங்களுக்கு பாதபூஜை செய்தார்கள். ஸ்ரீகுரு மிக சந்தோஷப்பட்டு அவர்களின் பக்தியை புகழ்ந்து "உங்களின் சந்ததி பெறுகும். உங்கள் வம்சத்தில் எல்லோருக்கும் எங்களிடம் பக்தி உண்டாகட்டுமென்று" ஆசீர்வதித்தார். பிறகு சாயம்தேவனின் தம்பதியர் எல்லோருக்கும் வடை, பாயாசத்துடன் அருமையான உணவை அளித்து பிச்சை செய்தனர். அந்த வயிற்றுவலி பிராமணனும் அதை சாப்பிட்ட உடனே ஸ்ரீகுருவின் மகிமையினால் அவன் வலி போய்விட்டது. ஆகையால் நாமதாரக ஸ்ரீகுருவின் கிருபை பெற்றவர்களுக்கு சகல வியாதிகளும் போய் அவன் செய்த பாவங்களெல்லாம் நசிந்துவிடுமென்று'' கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 14

நாமதாரகன் "சுவாமி! பிறகு ஸ்ரீகுரு அவர்கள் என்ன செய்தார்கள்" என்று கேட்டார். சித்த முனிவர், சாப்பிட்டு முடித்தவுடன் சாயம்தேவனை ஸ்ரீகுரு பார்த்து "உன் பக்தியை உவந்தேன். உன் வம்சத்தினர் என் பக்தர்களாவார்கள். உங்கள் வீட்டில் குறை என்பதிருக்காது" என்று ஆசீர்வதித்தார். சாயம்தேவன் குருவின் பாதங்களை தொட்டு வணங்கி "ஸ்ரீகுருவே உங்களுக்கு ஜயமுண்டாகட்டும். நீங்கள் மானிடராக காண்பித்தாலும் நீங்கள் மனித இனத்தை காப்பதற்காக பிறந்த தெய்வம்தான். உங்கள் சேவையினால் என் வாழ்வு மேன்மையடைந்தது. நீங்கள் எங்களை ஆசீர்வதத்தீர்கள். ஆனால் நான் இப்பொழுது ஒரு இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நான் சேவை செய்யும் முகம்மதீய மன்னர் ஒவ்வொரு வருடமும் ஒரு பிராமணரை கொன்று விடுவார். அதற்காக இப்பொழுது என்னை கொல்வதற்காக அழைத்திருக்கிறார். நான் இப்பொழுது அங்கு செல்ல வேண்டும். ஆகையால் நீங்கள் என்னை காப்பாற்ற வேண்டுமென்று" வேண்டினான். ஸ்ரீகுரு அவன் தலையில் தன் கையை வைத்து ஆசீர்வதித்து, "அப்பனே, நீ பயப்பட வேண்டாம். அவன் உன்னை ஒன்றும் செய்யமாட்டான். மேலும் உனக்கு அவன் பரிசுகள் வழங்கி ஆதரிப்பான். நீ திரும்பி வரும்வரை உனக்காக நான் இங்கே காத்துக் கொண்டிருப்பேன். உனக்கு நீண்ட ஆயுள் உண்டாகும்" என்று ஆசியை வழங்கினார்.

சாயம்தேவன் சந்தோஷமடைந்து புறப்பட்டு மன்னரிடம் சென்றான். மன்னர் சாயம்தேவனை பார்த்த உடனே, நீ ஏன் தாமதமாக வந்தாய் என்று கோபித்துக் கொண்டு அரண்மனைக்குள் சென்றார். உள்ளே சென்ற உடனே மன்னருக்கு தான் இறந்து விடுவதாக பயம் வந்து மயங்கி விழுந்தார். அப்பொழுது அவருக்கு ஓர் கனவு வந்தது. கனவில் தன்னை யாரோ கத்தியால் குத்துவதாக



தோன்றி வலி ஏற்பட்டது. மன்னர் உடனே தூக்கத்திலிருந்து எழுந்து தன்னை ஒருவன் குத்தியதால் வலி ஏற்பட்டது. அதே போல்தான் அடுத்தவனை கொடுமை படுத்தினால் அவன் எவ்வளவு துன்பம் பெற்றிருப்பான் என்று நினைத்து தான் இத்தனை நாட்கள் செய்த கொடுமைகளுக்கு வருந்தி மனம் திருந்தி வெளியில் காத்துக் கொண்டிருந்த சாயம்தேவனிடம் ஓடி வந்து "அய்யா நான் உங்களை அழைக்கவில்லையே நீங்கள் ஏன் வந்தீர்கள். என்னை மன்னியுங்கள்" என்று மன்னிப்பு கேட்டு அவனுக்கு ஆடை, ஆபரணங்களை பரிசாக கொடுத்து அனுப்பினார்.

சாயம்தேவன் ஸ்ரீகுருவின் ஆசியினால் தனக்கு வந்த ஆபத்து நீங்கியதை நினைத்து சந்தோஷமடைந்து மிக வேகமாக ஸ்ரீகுருவிடம் வந்து அங்கு நடந்ததை கூறி, குருவின் பாதங்களில் விழுந்து வணங்கி "சுவாமி உங்கள் கருணையினால் கிடைத்த இந்த வாழ்க்கையை உங்களின் சேவைக்கு அர்பணிக்கிறேன். என்னை உங்கள் சேவகனாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று வேண்டினான். அதற்கு ஸ்ரீகுரு "மகனே நான் இப்பொழுது ஒரு முக்கியமான வேலைக்காக தெற்கு திசையை நோக்கி செல்கிறேன். 16 வருடங்களுக்குப் பிறகு உங்கள் கிராமத்திற்கு வருவேன். அப்பொழுது நீ என்னை தரிசிக்கலாம். அதுவரையிலும் நீ சுகமாக வாழ்வாய்" என்று ஆசீர்வதித்து, தன் சீடர்களுடன் புறப்பட்டு அனேக புண்ணிய சேத்திரங்களை தரிசித்து 'வைத்தியநாதம்' சென்றடைந்தார். அங்கு அவர் சில காலம் மறைந்து வாழ்ந்தார்" என்றார். அதை கேட்ட நாமதாரகர் "ஸ்ரீகுரு அவர்கள் மறைமுகமாக வாழ நினைத்ததற்கு காரணமென்ன. தன்னுடன் இருந்த சீடர்களை எங்கு அனுப்பினார். மறைமுகமாக இருந்த காலத்தில் என்ன செய்தார் கூறுங்கள்" என்று வேண்டினான்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 15

ஸ்ரீகுருவின் மகிமை எல்லா இடங்களுக்கு தெரியவந்தது. ஆகையால் நீண்ட தூரத்திலிருந்து பலபேர் அவர் தரிசனத்திற்காக வரத் தொடங்கினார்கள். அதில் சிலர் நல்லவர்கள், சிலர் பக்தர்கள் போல் நடித்து வரும் கயவர்கள். முன்பு பரசுராமர் தீய மன்னர்களை கொன்றுவிட்டு பெற்ற நிலத்தை எல்லாம் பிராமணர்களுக்கு தானம் செய்து எங்கோ ஓர் மூலையில் தவம் செய்துக் கொண்டிருக்கையில் அங்கும் வந்து அந்த இடத்தையும் தானமாக கேட்டவுடனே அதையும் தானம் அளித்து விட்டு மறைமுகமாக கடலுக்குள் சென்றிருந்தார். அதைப் போலவே ஸ்ரீகுருவும் தன்னை நாடி வரும் தூயவர்களிலிருந்து தப்பிப்பதற்கு மறைமுகமாக இருக்க நினைத்தார். அப்பொழுது தன் சீடர்களை அழைத்து "நான் இந்த வைத்தியநாதத்தில் சில நாள் தனியாக இருக்க நினைத்தேன். ஆகையால் நீங்கள் எல்லோரும் தீர்த்த யாத்திரைகளுக்கு செல்லுங்கள்" என்று கூறினார். அதை கேட்ட சீடர்கள் அவர் பாதங்களை தொட்டு வணங்கி வேதனையுடன் "நீங்கள் ஏன் எங்களை வெறுக்கிறீர்கள். உங்கள் பாதங்களில் சகல தீர்த்தங்களும், சேத்திரங்களும் இருக்கின்றன. அப்படி இருக்கையில் உங்களை விட்டு வேறு தீர்த்த யாத்திரைகள் ஏன் செய்ய வேண்டும். புதையல் பக்கத்திலேயே இருக்கும் பொழுது பணத்திற்காக காடுகளில் தேட வேண்டுமா?" என்று முறையிட்டார்கள். அதை கேட்ட குரு பகவான் "சந்நியாசிகள் ஐந்து நாட்களுக்கு மேல் ஓரிடத்தில் இருக்கக் கூடாது. சந்நியாசிகளான பிறகு தீர்த்த யாத்திரைகள் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மனம் ஒருங்கிணையும். அதற்கு பிறகு ஓரிடத்தில் இருக்கலாம்" என்றார். சீடர்கள் "சுவாமி உங்கள் சொல்படியே செய்கிறோம். நாங்கள் எந்தெந்த தீர்த்தங்களுக்கு செல்ல வேண்டுமோ கூறுங்கள்" என்று வேண்டினர். ஸ்ரீகுரு "பிள்ளைகளே தீர்த்தங்களில் உத்தமமான காசிக்கு சென்று கங்கையில் நீராடி கங்கா தட யாத்திரை செய்யுங்கள். பிறகு யமுனை, சரசுவதி நதிகளில் கூட இப்படியே செய்யுங்கள்.



இதனால் பித்ரு தேவதைகளுக்கு மகிழ்ச்சியும் உங்களுக்கு பிரம்மலோக பிராப்தியும் கிடைக்கும். பிறகு வருண, குசாவர்த்த, சத்குரு, விபாச, சராவதி, விதஸ்டா, அசிக்னி, மருத்ருதா, மதுமதி, பயஸ்வினி, க்ருதவதி, ரேவா, சந்திரபாகா, ரேவதி, சரயு, கோமதி, வேதிக, கௌசிக, நித்திய ஜல, மந்தாகினி, ஸஹஸ்ரவக்த்த, பூர்ண, புண்ணிய, அருன, பஹூதா, வைரோசனி, புஷ்கர, பல்கு, அலக்நந்த, ஆகிய நதிகளிலும், நதி சங்கமங்களிலும் நீராடி (குளித்து) தல யாத்திரைகள் செய்யுங்கள். அப்படியே ஸ்ரீசைலம், அநந்தம், ராமேசுவரம், சேதுபந்தம், ஸ்ரீரங்கம், பத்மநாபம், நைமிஸாரண்யம், புருஷோத்தமம், மஹாலயம், கேதாரம், கோடிருத்திரம், மாத்ருகேசம், குப்ஜ தீர்த்தம், கோகாமுகி, பிரசாத தீர்த்தம், விஜய தீர்த்தம், சந்திர தீர்த்தம், கோகர்ணம், சங்கு கர்ணம் ஆகிய தீர்த்தங்களில் நீராடுங்கள். பிறகு அயோத்யா, மதுரை, மாயா, காஞ்சி, துவாரகா, சாலகிராமம், சபல கிராமத்தையும் தரிசனம் செய்யுங்கள். சவ்ய மார்கத்தில் மூன்று முறை கோதாவரி நதியை வலம் வந்தால் பாவங்களெல்லாம் நசிந்து மோட்சம் கிடைக்கும்.

பிறகு பீமேஸ்வர, பஞ்சர, குஸதர்பன, பூரண, கிருஷ்ணவேணி, துங்கபத்திரை, பம்பா, பீமா நதிகளின் தடயாத்திரை செய்யுங்கள். ஹரிஹரம், பாண்டுரங்கம், மாதுலிங்கம் செல்லுங்கள். கந்தர்வபுரம் (காணகாபுரம்) உத்தமமான புண்ணியத்தலம். அங்கே நிறைய தீர்த்தங்கள் இருக்கின்றன. அங்கு பீம, அமரஜ நதி சங்கமம் இருக்கின்றது. அங்கே இருக்கின்ற அரச மரம் மிக சக்தி வாய்ந்த மரம். அதை கல்ப விருட்சம் என்றே கூறலாம். அரச மரத்திற்கு எதிர் புறமாக நரசிம்ம தீர்த்தம், அதற்கு கிழக்கில் பாபநாச தீர்த்தம், பக்கத்தில் வரிசையாக வாரநாசி, ருத்திரபாத, சக்கர, கோடி, மன்மத தீர்த்தங்கள் உள்ளன. அங்கேயே 'கல்லேசுவரன்' என்ற சிவபெருமானின் கோவில் இருக்கிறது. அங்கே இருக்கின்ற சனீஸ்வரன் மிக சக்தி படைத்தவர். அங்கே தைலாபிஷேகம் (நல்லெண்ணை அபிஷேகம்) செய்தால் சனி பகவானின் அருள் கிடைக்கும். அங்கே சென்று பிரார்த்தனை செய்தால் சகல நலன்களும் கிடைக்கும். துங்க, பத்ர

நதிகளின் சங்கமம், மகாபல சங்கமம், நிவ்ருத்தி சங்கமங்களை தரிசனம் செய்யுங்கள். குரு சிம்ம ராசிக்கு வரும் போது கோதாவரிக்கு, கன்னியா ராசிக்கு வரும்போது கிருஷ்ணா நதிக்கு, துலாராசிக்கு வரும்போது துங்கபத்ராவிற்கு, கடகராசிக்கு வரும்போது மகாபல நதிக்கு புஷ்கரங்கள் வருகின்றன. அதாவது கங்கா நதி அந்த நேரங்களில் அந்தந்த நதிகளில் வந்திருக்கும். ஆகையால் அந்தந்த வருடங்களில் அந்தந்த நதிகளில் நீராடினால் புண்ணியம் கிடைக்கும். நதிகள் சமுத்திரத்தில் சேருகின்ற இடங்களில் நீராடினால் புண்ணியம் கிடைக்கும். சேசாத்திரி (திருப்பதி), ஸ்ரீரங்கம், கும்பகோணம், கன்னியாகுமரி, மத்ஸ்ய தீர்த்தம், பக்ஷி தீர்த்தம் முதலியவை முக்கியமானவை. பரமேசுவரன் இருக்கும் தனுஷ்கோடி, ஸ்ரீரங்கநாத சன்னதியிலுள்ள காவேரி, புருஷோத்தமத்திலுள்ள சந்திரகுண்டமும், கோடி தீர்த்தமும் முக்கியமானவை. மஹாலட்சுமி வசிக்கும் கொல்ஹாபூர், கிருஷ்ணா தீர்த்தத்திலுள்ள பில்லவடியில் புவனேசுவரி மாதா இடத்திலும் தவம் செய்தால் ஈச்வரப்பிராப்தி அடையலாம். வருணா சங்கமத்தில் நீராடி மார்க்கண்டேயர் என்ற சங்கமேசுவரரைப் பூஜிக்க வேண்டும். அமரபுரத்திலுள்ள கிருஷ்ணவேணி மற்றும் பஞ்ச நதி சங்கமத்தில் மூன்று நாட்கள் குளித்து உபவாசமிருந்தால் சகல கோரிக்கைகளும் தீர்ந்து பரமார்த்தம் கிடைக்கும். யுகாலயம், சூர்பாலயம், கபிலாஸ்ரமம், கேதாரம் ஆகிய புண்ணியத் தலங்களுக்கு செல்லுங்கள். ஸ்ரீ தத்தாத்ரேயாின் சேத்திரமான 'பிடாபுரத்திற்கு' செல்லுங்கள். பிறகு மணிகிரி, ருஷபாத்திரி, கல்யாண நகரம், அஹோபிலம் செல்லுங்கள். கடகராசியில் சூரியன் வரும் நாட்களில் நதிகளுக்கு ரஜஸ்வலா தோஷம் இருக்கின்றது. அந்த நாட்களில் நதிகளில் நீராட கூடாது. இது நதிகரையில் வசிப்பவர்களுக்கு பொருந்தாது" என்று கூறினார். அப்பொழுது சீடர்கள் பகவானை வணங்கி அவரின் ஆசிகள் பெற்று தீர்த்த யாத்திரைக்கு சென்றார்கள். நான் மட்டும் அவருக்கு சேவை செய்வதற்காக அவருடனே இருந்து விட்டேன்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*





## அத்தியாயம் 16

நாமதாரகன் சித்த முனியை வணங்கி "மகாத்மா அப்பொழுது ஸ்ரீகுருவின் கட்டளைப்படி தீர்த்த யாத்திரைகளுக்கு சென்ற சீடர்கள் யார்? அதற்குப் பிறகு என்ன நடந்தது" என்று கேட்டான். அதற்கு சித்த முனி "குருவின் கட்டளைப்படி என்னைத் தவிர மற்ற சீடர்கள் எல்லாம் தீர்த்த யாத்திரைக்கு சென்றுவிட்டார்கள். நான் குருவுக்கு சேவை செய்து கொண்டு அவருடன் இருந்தேன். வைத்தியநாதத்தில் ஸ்ரீகுரு அவர்கள் ஒரு வருடம் மறைமுகமாக இருக்க நினைத்தார். அப்பொழுது ஒரு நாள் ஒரு பிராமணன் ஒருவன் வந்து குருவை போற்றி "சுவாமி, உங்களை பார்த்த உடனே என் மனம் மிக்க மகிழ்ச்சி அடைந்தது. ஆனால் நான் நீண்ட நாட்கள் ஆத்ம சித்திக்காக தவம் செய்தும் என் மனம் சாந்தமடையவில்லை. ஞானமும் பெறவில்லை. நான் ஞானம் அடையாததற்கும், மனம் சாந்தம் பெறாததற்கும் காரணம் புரியவில்லை. நீங்கள் இந்த உலகை காப்பதற்காக அவதரித்த மகான். நான் ஞானம் பெறுவதற்கு ஏதாவது உபதேசம் செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்" என்றான்.

ஸ்ரீகுரு சிரித்து "ஓ, நீ நீண்ட நாட்கள் தவம் செய்தேன் என்றாயே, அப்படி தவம் செய்வதற்கு குருவிடம் உபதேசம் பெற்றாயா?" என்று கேட்டார். அவன் "சுவாமி நான் முன்பு ஒரு குருவிடம் சேர்ந்து ஞானம் பெறுவதற்காக உபதேசம் செய்ய வேண்டினேன். ஆனால் அவரோ நான் ஞானம் பெறுவதற்கு வேதம், சாத்திரம், தர்க்கம், வியாகர்ணம், பாஷ்யம் முதலியவை சொல்லி கொடுக்காமல் அவருக்கு சேவைகளை செய்ய வைத்துக் கொண்டிருந்தார். அது மட்டுமில்லாமல் "உனக்கு புத்தி ஒருமைப்படவில்லை, ஆகையால் உனக்கு நான் ஏதும் சொல்லமுடியாது. நான் சொன்ன சாதாரண வேலைகளை உன்னால் செவ்வனே செய்யமுடியவில்லை" என்று திட்டிக் கொண்டிருப்பார். நீண்ட நாட்கள் ஆகியும் எனக்கு ஏதும் சொல்லவில்லை என்ற

கோபத்தால் ஒருநாள் அவர் சொன்ன வேலையை நான் செய்யவில்லை. இதற்கு அவர் கோபித்து வெகுவாக திட்டினார். ஆகையால் நான் அவரை விட்டுவிட்டு வந்துவிட்டேன்" என்றான். அதற்கு சுவாமி "என்ன பிராமணரே நீ எவ்வளவு தவறு செய்துவிட்டாய். நீ செய்த தவறு தற்கொலைக்கு சமமானது. உன்னிடம் இருக்கும் அறியாமையை தெரிந்து கொள்ளாமல் குருவை நிந்திக்கிறாயே. நீ உண்மையாக குரு துரோகி. குரு துரோகிக்கு இவ்வுலகிலும், மேலுலகிலும் சுகம் கிடைக்காது. அவனுக்கு ஞானம் என்றும் கிடைக்காது. குரு சேவா விதிகளை தெரிந்துகொண்டவன் மட்டுமே உண்மையான சீடர். உண்மையான குருபக்தனுக்குத்தான் வேதங்கள் தெரிந்து கொள்ளமுடியும். அது மட்டுமின்றி குருவின் அருளையும் ஆசியையும் பெற முடியும். உன் போன்ற குரு துரோகியின் முகம் பார்ப்பதும் கூட அபசகுணமாகும். ஆலயத்தில் மலம் கழித்து, அதற்கு திட்டியவனை கடிந்துக் கொள்வது போல் இருக்கிறது உன் செயல்" என்றார். இதைக் கேட்ட அந்த பிராமணர் பயந்து துக்கத்துடன் சுவாமிகளின் பாதங்கள் மேல் விழுந்து "பரமகுருவே போற்றி போற்றி. நீங்கள் அறிவின் கடல். நீங்கள் எந்த குணமும் இல்லாதவர்கள். நீங்கள் ரூபமில்லாதவர்கள். நான் அறியாமையினால் குரு துரோகம் செய்துவிட்டேன். குருவை எப்படி தெரிந்துகொள்ள வேண்டும்" என்று மிக மன்றாடி கேட்டான். குருநாதர் அவனுடைய வேதனையை கண்டு மணமுருகி குரு சேவையை எவ்வாறு செய்ய வேண்டுமென்று சொல்ல தொடங்கினார்.

"அப்பனே! கேள், அம்மையப்பன்தான் முதல் குரு. நமக்கு அறிவை சொல்லுபவர் பரமகுரு. அவரை பிரம்மா, விஷ்ணு, மகேசனின் அவதாரமான தத்தாத்ரேயராக கருத வேண்டும். ஒருமுகப்படுத்திய மனதோடு குரு சேவை செய்ய வேண்டும். பாரதத்தில் இப்படி குரு சேவை செய்து குருவின் அருளையும் ஆசியும் பெற்றவர்களின் கதையை சொல்கிறேன் கேள்.

துவாபர யுகத்தில் 'தௌம்மியர்' என்ற மகரிஷி இருந்தார்.



அவரிடம் அருணன், பைதன், உபமன்யுவு என்ற மூன்று சீடர்கள் வேதம் படிப்பதற்காக வந்து அவருக்கு சேவை செய்துகொண்டிருந்தார்கள். அந்த காலத்தில் கல்வி கற்க வரும் சீடர்களின் அகங்காரத்தை போக்க, குருபக்தியை பெற்று மனதை ஒருங்கிணைப்பதற்காக அவர்களுக்கு வீட்டு வேலைகளையும் குருவின் தேவைகளையும் பூர்த்தி செய்ய சொல்வார்கள். அப்படி அவர்கள் செய்யும் வேலையின் தரத்தைப் பார்த்து அவர்கள் கல்வி பெற அனுக்கிரகம் புரிவார்கள்.

ஒரு நாள் இதற்காக தௌம்மியர் அருணியை அழைத்து "நீ நமது வயலுக்கு ஏரியிலிருந்து தண்ணீரை பாய்ச்ச வேண்டும். இல்லையென்றால் நமது நெல் பயிர் காய்ந்து விடும்" என்றார். உடனே அவன் வயலுக்கு சென்று ஏரியிலிருந்து தண்ணீரை கால்வாய் வழியாக வயலுக்கு கொண்டுவர முற்பட்டான். ஆனால் நடுவில் அந்த கால்வாய் துண்டிக்கப்பட்டு அதன் வழியாக தண்ணீர் வேறு இடத்திற்கு போய் கொண்டிருந்தது. அதைப் பார்த்து அவன் துண்டிக்கப்பட்ட இடத்தில் மண்ணையும் கற்களையும் போட்டு அடைக்கப் பார்த்தான். ஆனால் தண்ணீரின் வேகம் அதிகமாக இருந்ததினால் அவனால் அந்த துண்டிப்பை மூட முடியவில்லை. அதைப் பார்த்த அவன் வேதனையுடன் குரு சொன்ன வேலையை என்னால் செய்யமுடியவில்லையே. என் உயிரை பணயம் வைத்தாவது இந்த வேலையை செய்து முடிக்க வேண்டுமென்று நினைத்து அவனே அந்த கால்வாய் துண்டிக்கப்பட்ட இடத்தில் தன் உடலை கரையாக செய்து படுத்தான். ஆதலால் தண்ணீர் இப்பொழுது வயலுக்கு பாய தொடங்கிவிட்டது. வயல் முழுவதும் நீர் பாய வெகு நேரமாகி பொழுது சாய்ந்தது. இரவு நேரமாகியும் 'அருணி' ஏன் வரவில்லை என்று கவலையுடன் தௌம்மியர் அவனை தேடிக் கொண்டு வயலுக்கு வந்துவிட்டார். அங்கு வயல் முழுவதுமாக நீர் இருந்தது. ஆனால் அருணி காணவில்லை. அவர் பயந்து என்ன ஆயிற்று என்ற கவலையுடன் சீடனை பெயர் வைத்து கூப்பிட்டார்.

அருணி தண்ணீரிலேயே வெகுநேரம் இருந்ததனால் உடல் சீதலமாகி பதில் கொடுக்கமுடியாமல் மெல்ல 'ஆ' என்று சத்தம் கொடுத்தான். அதை கேட்டு அருணியை தேடிக் கொண்டு சென்று கால்வாய் கரையிலிருந்த அவனை மெல்ல தூக்கி என்னவாயிற்று என்று கேட்டார். அருணி அங்கு நடந்ததெல்லாம் சொல்லி தான் குருவின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக இப்படி செய்தேன் என்றான். தௌம்மியர் அருணியின் குருபக்திக்கும், தைரியத்திற்கும் உவந்து அவனுக்கு எல்லா வித்தைகளையும், வேதங்களையும் பெறுவான் என ஆசீர்வதித்தார். குருவின் ஆசிர்வாதத்தால் அவன் சகல வித்தைகளை பெற்றான். தௌம்மியர் அருணியிடம் "இனி நீ வீட்டிற்கு சென்று நல்ல பெண்ணை பார்த்து கல்யாணம் செய்து சுகமாக வாழ்" என்று ஆசிர்வதித்து அனுப்பினார். அருணி குருவை வணங்கி வீட்டிற்கு சென்று சுகமாக வாழ்ந்து உலக புகழ் பெற்றான்.

பிறகு ஒருநாள் தௌம்மியர் தனது இரண்டாவது சீடனை சோதிக்க நினைத்து அவனை அழைத்து "மகனே, வயலில் நெல் பயிரின் அறுவடை காலம் நெறுங்கிவிட்டது. அதை இரவு பகலாக காவல் காத்து அறுவடை செய்துவா" என்றார். இதைக் கேட்ட 'பைதன்' தனக்கு குரு சேவை செய்வதற்கு அவகாசம் கிடைத்ததென்று சந்தோஷப்பட்டு வயலுக்கு சென்று பயிரை காவல்காத்து அறுவடை செய்வதற்கு நேரம் வந்தவுடனே அதை அறுவடை செய்து அதை அடித்து நெல்லை தனியாக சேர்த்தான். பிறகு குருவிடம் சென்று "நெல் தயாராகிவிட்டது, நீங்கள் அனுமதி கொடுத்தால் வீட்டிற்கு கொண்டுவருகிறேன்" என்று சொன்னான். அதற்கு தௌம்மியர் சந்தோஷமடைந்து நெல்லை வீட்டிற்கு கொண்டுவருவதற்கு தன்னிடமிருந்த மாட்டு வண்டியையும் ஒரு எருமை மாட்டையும் கொடுத்தார். அவன் எருமை மாட்டை வண்டியின் ஒரு பக்கம் கட்டி இரண்டாவது பக்கம் தன் கழுத்தில் வைத்து கொண்டு வண்டியை வயலுக்கு இழுத்து சென்றான். அங்கு நெல்லை வண்டியில் ஏற்றி முன் போலவே ஒரு பக்கம் எருமைமாட்டை கட்டி இன்னொரு



பக்கத்தை தன் கழுத்தில் வைத்து கொண்டு இழுக்கலானான். அப்படி வருகையில் ஓர் இடத்தில் வண்டி சேற்றில் சிக்கிக் கொண்டது. அப்பொழுது அவன் எப்படியாவது குருவின் கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்ற ஆவலுடன் அவன் ஒருவனே வண்டியை இழுக்க முற்பட்டு சோர்வடைந்து மயங்கி விழுந்துவிட்டான். வெகுநேரமாகியும் அவன் வரவில்லையே என்று நினைத்த தௌம்மியர் அவனை தேடிக் கொண்டு சென்றார். வழியில் சீடன் மயங்கி விழுந்து கிடந்ததைப் பார்த்து எழுப்பி சீடனின் விடாமுயற்சிக்கும் அவன் குருபக்திக்கும் மிக்க சந்தோஷமடைந்து அவனை ஆசீர்வதித்து அவன் சகல சாத்திரங்கள் பெற அருள்புரிந்தார். உடனே குருவின் ஆசீர்வாதத்தால் சகல வித்தைகளையும் அவன் பெற்றான். அவனையும் நீ வீட்டிற்கு சென்று விவாகம் செய்து கொண்டு சுகமாக வாழ் என கூறி அனுப்பிவிட்டார். அவனும் வீட்டிற்கு சென்று கல்யாணம் செய்து கொண்டு நல்ல வித்வானாக உலக புகழ் பெற்றான்.

மூன்றாவது சீடனான 'உபமன்யு' மிக சிரத்தையுடன் குருவுக்கு பணிவிடைகளை செய்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் அதிகமாக சாப்பிடுவதனால் மந்தமாகி படிக்க முடியவில்லை. இதைப் பார்த்த தௌம்மியர் அவனை பசுக்களை தினமும் காலையில் காட்டிற்கு ஓட்டி சென்று மேய்த்து வரச் சொன்னார். அவன் பசுக்களை காலையில் காட்டிற்கு ஓட்டிச் சென்றான். ஆனால் அவனுக்கு கொஞ்சம் நேரமானவுடனே பசி வந்து விட்டது. உடனே பசுக்களை வீட்டிற்கு ஓட்டி வந்தான். இதைப் பார்த்த குரு ஏன் சீக்கிரமாக பசுக்களுடன் திரும்பிவிட்டாய் என்று கேட்டார். அவன் பசி வந்துவிட்டது, ஆதலால் திரும்பி விட்டேன் என்றான். உடனே குரு "நீ இனிமேல் காலை முதல் மாலைவரை மேய்த்து வரவேண்டுமென்று" கட்டளை இட்டார். மறுநாள் காலையில் பசுக்களை காட்டிற்கு ஓட்டி சென்றான். ஆனால் கொஞ்ச நேரத்தில் பசி வந்துவிட்டது. ஆதலால் பசுக்களை காட்டில் மேயவிட்டு பக்கத்திலிருந்த கிராமத்திற்கு சென்று பிராமணர் வீட்டில் பிச்சை எடுத்து சாப்பிட்டு தன் பசியை போக்கி மாலை வரை

காட்டிலிருந்து பசுக்களுடன் வீட்டிற்கு வர தொடங்கினான். இதனால் அவன் உடல் குறையாமல் இருந்துவிட்டது. இதைப் பார்த்த தௌம்மியர் அவனிடம் "உனக்கு பகலில் சாப்பாடு கிடையாது. இருப்பினும் உன் உடல் மெலியவில்லையே ஏன்" என்று கேட்டார். அவன் "சுவாமி என்னால் பசியை தாங்க முடியாமல் பக்கத்திலுள்ள வீடுகளுக்கு சென்று பிச்சை செய்து அதை சாப்பிடுகிறேன்" என்றான். அதற்கு குரு கோபித்து "குருவுக்கு கொடுக்காமல் நீ எப்படி சாப்பிடலாம். இது குரு துரோகமாகும். ஆகையால் நாளை முதல் நீ கொண்டு வரும் பிச்சையை என்னிடம் கொடு" என்றார். அவன் தான் செய்த பிச்சையை குருவிடம் கொடுத்து அவர் கொடுக்கும் சிறிது ஆகாரத்தை சாப்பிட்டு மறுபடியும் காட்டிற்கு சென்றான். ஆனால் அவனுக்கு பசி தீரவில்லை. ஆகையால் இரண்டாவது முறை வேறு சில வீடுகளுக்கு சென்று பிச்சை செய்து சாப்பிடலானான். இப்படி சில நாட்கள் கழிந்தன. அவன் இரண்டாவது முறை பிச்சை செய்து சாப்பிடுவதனால் அவன் உடல் மெலியாமல் முன்பை விட குண்டாகிவிட்டது. இதைப் பார்த்த குரு அவனை கூப்பிட்டு "உனக்கு பசிதீர நான் உணவு கொடுக்காமல் இருந்தும் உன் உடல் ஏன் மெலியவில்லை" என்று கேட்டார். அவன் உண்மையை மறைக்காமல் தான் இரண்டாவது முறை பிச்சை செய்து சாப்பிடுவதை குருவிடம் சொன்னான். அதற்கு அவர் கோபித்து "இரண்டாவது முறை செய்த பிச்சையையும் நீ என்னிடம் கொடுத்துவிடு" என்று சொன்னார். அவன் மறுநாள் முதல் அப்படியே செய்யத் தொடங்கினான். இதனால் அவனுக்கு பசி தீரவில்லை. குரு பிச்சை தானே செய்ய வேண்டாம் என்று சொன்னார். வேறு ஏதாவது ஆகாரம் கிடைக்குமா என்று யோசித்தான். அப்பொழுது கன்றுகள் பசுக்களிடம் பால் குடிப்பதைப் பார்த்தான். அவை குடித்து விட்டது போக மிச்சமிருக்கும் பாலை கறந்து குடிக்கத் தொடங்கினான். இதனால் அவன் உடல் இன்னமும் குண்டாகி கொண்டிருப்பதைப் பார்த்து காரணத்தை கேட்டார் குரு. அவன் பசுக்களிடம் மீதமுள்ள பாலை குடிக்கிறேன் என்று சொன்னான். இதை கேட்ட அவர் கோபித்து, "டே! மூடா, நீ பசுக்களின் எச்சையை குடித்தால் நீயும் பசுக்களைப்போல்



புத்தியில்லாதவன் ஆகிவிடுவாய். ஆகையால் இனிமேல் அப்படி குடிக்கக்கூடாது" என்றார். மறுநாள் முதல் குருவின் கட்டளைப்படி நடந்து கொண்டான். இதனால் அவன் பசியை தீர்க்க வேறு வழியை யோசித்து திரிந்துகொண்டிருக்கையில் எருக்க மரக்கிளை ஒன்று அவன் கை பட்டு உடைந்துவிட்டது. அந்த உடைந்த இடத்திலிருந்து பால் வருவதை பார்த்தான். அப்பொழுது அவன் மனதில் இது எச்சை செய்த பாலில்லை. ஆகையால் இதை சாப்பிடலாம் என்று நினைத்து இலைகளிலிருந்து ஒரு தொன்னையை செய்து எருக்க மரத்தின் கிளைகளை உடைத்து பாலை சுரப்பி கொண்டிருக்கையில் சில துளி பால் சிதறி அவன் கண்களில் விழுந்து கண்கள் இரண்டும் பார்வை இல்லாமல் போய்விட்டன. பார்வை இழந்து அவன் திக்கு தெரியாமல் பசுக்களை தேடிக் கொண்டு போகையில் ஒரு கிணற்றில் விழுந்துவிட்டான். பொழுது சாய்ந்ததும் தன் சீடன் வரவில்லையே என்று நினைத்து தௌம்மியர் அவனை தேடி காட்டுக்கு சென்று அவனை கூப்பிட்டார். இதை கேட்ட உபமன்யு கிணற்றிலிருந்து "ஓ" என்று சத்தமிட்டான். சத்தத்தை கேட்டு கிணற்றருகில் வந்து நடந்ததை தெரிந்து கொண்டு அவனிடம் அஸ்வினி தேவர்களை வேண்டிக்கொள் உனக்கு பார்வை வரும் என்று சொன்னார். அவன் அப்படியே வேண்டிய உடனே பார்வை வந்து விட்டது. உடனே அவன் கிணற்றிலிருந்து வெளியே வந்து குருவை வணங்கினான். அவன் குருபக்திக்கு உவந்து தலைமேல் தன் கை வைத்து "உன் பக்திக்கும் சேவைக்கும் நான் சந்தோஷமடைந்தேன். உனக்கு சகல வித்தைகள் வசமாகும். நீ வீட்டிற்கு சென்று கல்யாணம் செய்துகொண்டு சுகமாக வாழ். உன் புகழ் உலகமெல்லாம் சென்றடையும். உனக்கு சமமான 'உதங்கன்' என்ற சீடன் உன்னிடம் கல்வி கற்க வருவான். அவன் குருகாணிக்கையாக நாகலோகத்தை ஜெயித்து நாககுண்டலங்களை உனக்கு அளிப்பான். அவன் ஜனமேஜயனுடன் சர்ப்ப யாகத்தை செய்ய வைத்து தட்சகனை இந்திரனுடன் கொண்டு வருவான் இதனால் உன் புகழ் உலகத்தின் நாலாபுறமும் பரவும்" என்றார்.

நரசிம்ம சரசுவதி சுவாமி அவர்கள் பிராமணரிடம் குரு பக்தியின் மகிமையை சொல்லி குரு துரோகிக்கு இவ்வுலகத்திலும் மேல் உலகத்திலும் சுகமில்லை. மேலும் எங்கு சென்றாலும் பிரயோசனமில்லை. குரு சந்தோஷமடைந்தால் எல்லாமே கிடைக்கும். ஆகையால் நீ உடனே உன் தவறை உணர்ந்து உன் குருவிடம் சென்று மன்னிப்பு கேள். அவர் உன்னை மன்னித்து விடுவார்" என்றார். இதைக் கேட்ட அந்த பிராமணர் "ஸ்வாமி, நான் உண்மையாக குரு துரோகம் செய்து விட்டேன். எனக்கு எவ்வுலகிலும் மன்னிப்பு கிடையாது. உடைந்த என் குருவின் மனம் சேராது. குரு துரோகியான நான் வாழ்ந்தும் உபயோகமில்லை. என் பாவத்திற்கு பரிகாரமாக உயிரை விடுவேன்" என்று தற்கொலைக்கு முற்பட்டான். இதைப் பார்த்த ஸ்ரீகுரு மனமுருகி "பாவமன்னிப்பினால் உன் பாவங்களெல்லாம் போய்விட்டன. இப்பொழுது உன் குருவை மனதார நினைத்திடு" என்று சொல்லி ஆசிர்வதித்தார். உடனே அவனுக்கு மயிர்கூச்சலிட்டு, பேச முடியாமல் ஆகிவிட்டான். அவன் நன்றியுடன் சுவாமி பாதங்களுக்கு நமஸ்கரித்தான். சுவாமி அவர்கள் அவன் தலைமேல் வலது கையை வைத்து "நீ சகல சாத்திரம், வேதம், மந்திரம் முதலியன பெற்று விடுவாய்" என்று ஆசிர்வதித்து "நான் சொன்ன குரு பக்தியுடன் உன் குருவிடம் செல். உன்னை மன்னித்து ஏற்றுக் கொள்வார்" என்று கூறினார். அந்த பிராமணர் அப்படியே செய்து முக்தி அடைந்தான்.

அப்படி ஒரு வருடம் மறைமுகமாக இருந்த பிறகு ஸ்ரீ நரசிம்ம சரசுவதி அந்த இடத்தை விட்டு கிருஷ்ணா நதியின் மேற்கு திசையில் சென்று 'பில்லவடி' கிராமத்தில் புவனேசுவரி தேவி சன்னதியை அடைந்து அங்கு கிருஷ்ணா, வேணி நதிகளின் சங்கமத்தில் உள்ள ஓதைம்பர (அத்திமரம்) மரத்தினடியில் சிலகாலம் வாழ்ந்தார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 17

சித்தமுனி நாமதாரகனை பார்த்து "நீ உண்மையான குரு பக்தன். ஆகையால் உனக்கு இந்த குரு சரித்திரத்தை கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. மழை வருவதற்கு முன்பு ஜில்லென்ற காற்று வீசும். அதேபோல் குருவின் கருணை பெறுவதற்கு முன்பு அவர் கதையை கேட்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஆகையால் காமதேனுவான குரு சரித்திரத்தை கூறுகிறேன் கேள்" என்றார். "சுவாமி கிருஷ்ணா நதிக்கரையில் பில்லவடிகா சேத்திரத்தில் மேற்கு கரையில் அத்திமரத்தடியில் சாதுர்மாத (நான்கு மாதங்கள்) விரதம் செய்து கொண்டிருந்தார். அங்கு அவர் மறைமுகமாக இருந்து பிச்சை செய்து வாழ்ந்துக் கொண்டிருந்தார். அவர் அங்கு இருந்ததினால் அவ்விடத்தின் மகிமை அதிகமாயின" என்றார். அதைக் கேட்ட நாமதாரகன் "ஏன் சுவாமி அவர்கள் பிச்சை செய்து மறைமுகமாக இருந்தார். அவர் எல்லாம் வல்ல இறைவனாயிற்றே" என்றான்.

சித்தமுனி "அப்பனே பரம்பொருள் ஆகிய ஈசனும், மும்மூர்த்திகளின் அவதாரமாகிய தத்தாத்ரேயரும் பிச்சை செய்யவில்லையா? மகான்கள் பிச்சை செய்வதும், தீர்த்த யாத்திரைகள் செய்வதும், தவம்புரிவதும் பக்தர்களின் நன்மைக்காகவே தவிர அவர்களின் சுயநலத்திற்காக இல்லை. பக்தியில்லாதவர்கள், சுயநலவாதிகளிடமிருந்தும் தப்பிப்பதற்காகவே மறைமுகமாக இருப்பார்கள். ஆனால் எப்படி கதிரவன் ஒளிகள், கஸ்தூரியின் வாசனை மறைக்க முடியாதோ குருவின் மகிமையும் வெளிப்பட்ட கதையை கூறுகிறேன் கேள்" என்றார்.

"கரவீர நகரத்தில் சகல வேதங்களும், சாத்திரங்களும் படித்த பிராமண பண்டிதர் இருந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். ஆனால் அவன் அறிவில்லாதவன், மூடனுமாக இருந்தான். அவனுக்கு சிறுவயதிலேயே தாய், தந்தையர் இறந்து விட்டார்கள்.

அவன் ஏழு வயது அடைந்த உடன் மற்ற பிராமணர்கள் உபநயனம் செய்து வைத்தார்கள். மூடனாகிய அவனால் காயத்திரி மந்திரம் கூட சொல்ல முடியவில்லை. எத்தனை முறை சொல்லியும் அவனுக்கு அந்த மந்திரம் நினைவுக்கு வருவதில்லை. இதைப் பார்த்த வித்வான்களெல்லாம் அவனிடம் "நீ எப்படி பெரிய வித்வானான உன் தந்தைக்கு பிறந்தாய். உன்னால் உன் குடும்ப கௌரவம் போய்விட்டது. இப்படிப்பட்ட மூடனாகிய நீ வாழ்ந்து என்ன பிரயோஜனம். கல்லை கட்டிக் கொண்டு ஆற்றில் குதித்து சாக வேண்டியதுதானே. கல்வியற்றவன் பசுவைவிட கேவலம். கல்வி அழியாத செல்வம். படித்தவனின் வாழ்வே வாழ்வு. வித்வானை எல்லோரும் பூஜிப்பார்கள். வித்வான் வயதில் சிறியவனாக இருந்தாலும் பெரியோர்களால் போற்றப்படுவான். வித்தை சகோதரன் போல் உதவும்" என்றார்கள். அதை கேட்ட அந்த மந்தமதி "நான் என்ன செய்வது. நான் முற்பிறவியில் கல்வியை தானம் செய்யவில்லையோ? ஆதலால் இந்த பிறவியில் இப்படி மூடனாக பிறந்தேனோ? ஆகையால் நான் நன்றாக படித்து வித்வானாவதற்கு ஏதாவது உபாயமிருந்தால் கூறுங்கள். நான் அப்படியே செய்கிறேன்" என்றான். அதற்கு அவர்கள் உனக்கு எவ்வளவோ சொல்லி கொடுத்தும் படிப்பு வரவில்லை. இனிமேல் என்ன செய்தாலும் உனக்கு படிப்பு வராது. ஆதலால் நீ பிச்சை எடுத்து பிழைக்கத்தான் முடியும். உன்னால் உன் குலம் நாசமாகிவிட்டது. இங்கிருந்து சென்று விடு என்று ஏசினார்கள். இதைக் கேட்ட அவன் மனவேதனையுடன் தன் உயிரை விட நினைத்து காட்டுவழியாக பில்லவடி கிராமத்திற்கு வந்தான். அங்கு புகழ் பெற்ற புவனேஸ்வரியம்மன் கோயிலுக்கு சென்று அம்மன் முன் ஏதும் சாப்பிடாமல் தனக்கு கல்வியை பெற வரம் அளிக்க வேண்டுமென்று மூன்று நாட்கள் வேண்டினான். மூன்று நாட்களாகியும் அம்மனின் தரிசனம் கிடைக்காததால் கோபம் கொண்டு கத்தியை எடுத்து தன் நாக்கை அறுத்து அம்மனின் பாதங்களில் வைத்து நீ இன்னும் தரிசனம் தரவில்லை என்றால் என்



தலையை அறுத்து உன் பாதங்களில் வைப்பேன் என்று சபதம் செய்தான். அப்பொழுது தேவி கருணை புரிந்து அவன் கனவில் தோன்றி "மகனே நீ ஏன் என்னிடம் கோபித்து கொள்கிறாய். மும்மூர்த்திகளின் அவதாரமான ஸ்ரீகுரு கிருஷ்ணா நதியின் மேற்கு கரையில் அத்திமரத்தின் அடியில் இருக்கிறார். நீ அவரிடம் சரணடைந்து விடு. உன் எண்ணங்கள் நிறைவேறும்" என்று கூறி மறைந்துவிட்டாள். உடனே, அந்த சிறுவன் எழுந்து சந்தோஷமடைந்து நதியை தாண்டி மேற்கு கரைக்கு சென்று அத்திமரத்தடியிலிருந்த ஸ்ரீகுருவின் பாதங்களில் தன் சிரம் வைத்து வணங்கினான். உடனே சுவாமி அவர்கள் சந்தோஷமடைந்து அவன் தலையில் தன் கரத்தை வைத்த உடனே துண்டிக்கப்பட்ட நாக்கு மீண்டும் சேர்ந்துவிட்டது. ஸ்ரீகுருவின் ஆசீர்வாதத்தால் அவன் அனைத்து சாத்திரங்களும், வேதங்களும் பெற்று பண்டிதனாகி, ஸ்ரீகுருவிடம் விடைபெற்று கிராமத்திற்கு சென்று உலக புகழ் பெற்று எல்லா சுகங்களுடன் வாழ்ந்தான்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 18

நாமதாரகன் சித்தமுனியிடம் "எனக்கு ஸ்ரீகுருவின் லீலைகள் மேலும் கேட்க ஆவலாக இருக்கிறது" என்று வேண்டினான்.

"அப்பனே உன்னால் எனக்கும் ஸ்ரீ குருவின் கதையை சொல்ல மிக ஆனந்தமாக இருக்கிறது. பிறகு சில நாட்கள் பில்லவடியில் வசித்து அங்கிருந்து வருணா சங்கமம் வந்து அங்கு கிருஷ்ணா நதிகரையில் இருக்கும் தீர்த்தங்களில் நீராடிவிட்டு பாவங்களை தீர்க்கும் சிவ, பத்ர, போகவதி, கும்பி, சரசுவதி என்ற ஐந்து நதிகள் கிருஷ்ணா நதியில் சங்கமிக்கும் இடத்திலுள்ள அமரபுரத்துக்கு வந்து சேர்ந்தார். இத்தலம் காசியைப்போல் மனோகரமானது. இங்கு பஞ்ச (ஐந்து) நதிகள் கிருஷ்ணா நதியில் சங்கமமாகின்றதால் இது பிரயாகை, குருசேத்திரங்களைப் போல் புகழ் பெற்றது. சங்கமம் அருகில் அமரேஸ்வரரும் அவரை பூஜிக்கும் அறுபத்து நான்கு யோகினிகளும் இருக்கிறார்கள். இந்த அமரேசுவர லிங்கம் அந்த காசி விஸ்வேஸ்வரரே. அங்கு வேணி நதியுடன் சேர்ந்து கிருஷ்ணா தெற்கு திசையாக செல்கிறது. அங்கு வடக்கு திசையில் சுக்ல தீர்த்தம் இருக்கிறது. அதனருகில் அத்திமரம் இருக்கிறது. இந்த அத்தி மரத்தின் அருகில் பாபவினாசனம், காம்மிய தீர்த்தம், அமர தீர்த்தம், கோடி தீர்த்தங்கள் இருக்கின்றன. இந்த தீர்த்தங்கள் எல்லாம் பெரும் மகிமை உடையவை. இது பெருமை வாய்ந்த தீர்த்தத்தலம். இந்த கிருஷ்ணா பஞ்ச நதி சங்கமத்தில் நீராடினால் எல்லா காரியங்களும் நிறைவேறும். இங்கிருக்கும் அத்திமரம் சாட்சாத் கல்ப விருட்சம். இந்த சேத்திரத்தின் மகிமையை வெளிப்படுத்துவதற்காகவே சுவாமி அவர்கள் அங்கு பனிரெண்டு வருடங்கள் வசித்தார்.

தினமும் நரசிம்ம சரசுவதி அவர்கள் அமரபுரத்திற்கு சென்று பிச்சை செய்து வருவார். அந்த கிராமத்தில் சாதுவான, ஆசாரமான பிராமணர் ஒருவர் பதிவிரதையான தன் மனைவியுடன் வாழ்ந்து



வந்தார். அவர்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தார்கள். அவர்கள் கிராமத்தில் பிச்சை செய்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தனக்கு கிடைத்த பிச்சையிலேயே அதிதிகளை சேவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வீட்டில் ஒரு 'அவரைக்கொடி' இருந்தது. பிச்சை கிடைக்காத நாட்களில் அந்த அவரைக்காய்களை சமைத்து சுவாமிக்கு படைத்து சாப்பிடுவார்கள். அப்படி இருக்கையில் ஒருநாள் குருநாதர் இவர்கள் வீட்டிற்கு பிச்சைக்கு வந்தார். தம்பதியினர் பக்தியுடன் குருநாதரை அழைத்து சகல பூஜைகளை செய்து, அன்று அவர்கள் சமைத்த அவரைக்காய் கறியை வேதனையுடன் சுவாமிக்கு பிச்சை அளித்தார்கள். அதை பெற்றுக் கொண்டு சந்தோஷமடைந்து அவர்களை தேற்றி "இன்றுடன் உங்கள் தரித்திரம் தீர்ந்துவிட்டது" என்று சொல்லி வெளியே போகையில் அங்கிருந்த அவரைக் கொடியை வேருடன் பிடுங்கி போட்டுவிட்டு சென்றார். இதைப் பார்த்த பிராமணரின் மனைவி, குழந்தைகள் மிக வேதனைப்பட்டு நாம் குருநாதருக்கு என்ன தீங்கு செய்தோம். நமக்கு இந்த சிறிய உணவையும் இல்லாமல் செய்துவிட்டாரே. நாம் என்ன பாவம் செய்தோம் என்று வேதனையுடன் பேசினார்கள். இதைக் கேட்ட பிராமணர் "ஏன் இப்படி பேசுகிறீர்கள். நமக்கு என்ன பிராப்தமோ அதுதான் இருக்கும், நடக்கும். எல்லாமே நம்மின் விதிப்படிதான் நடக்கும். அந்த ஈசன் அவரவர்களின் விதியைப் போல் வேதனைகளையும், சுகங்களையும் கொடுப்பார். இதை நாம் அனுபவிக்க வேண்டும். அந்த 'அவரை' கொடியை மீண்டும் அந்த இடத்திலேயே புதைத்து தண்ணீர்விட்டு பார்ப்போமென்று" சொல்லி அங்கு கடப்பாரையை எடுத்து தோண்ட முயன்றார். அப்பொழுது ஒரு உலோகப் பாத்திரம் ஒன்றின் மேல் கடப்பாரை பட்ட சத்தம் வந்தது. அது என்னவென்று ஆவலுடன் தோண்டி வெளியே எடுத்து பார்க்கையில் தங்க காசுகள் நிறைந்த பாத்திரம் கிடைத்தது. அதை தன் மனைவிக்கு காட்டி பார்த்தாயா, குருநாதர் இந்த கொடியை பிடிங்கியதால் நமக்கு இந்த புதையல் கிடைத்தது. நம்மின்

ஏழ்மையை போக்கத்தான் அப்படி செய்தார். குருமகான்கள் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் அர்த்தமிருக்கும். நீ தெரியாமல் குருநாதரை பேசிவிட்டாய். இந்த செய்தியை சுவாமியிடம் கூறி மன்னிப்பு கேட்டு நன்றியை தெரிவிப்போம், வா, போகலாம்" என்று எல்லோரும் ஸ்ரீகுருநாதரிடம் சென்று அவர்களுக்கு புதையல் கிடைத்ததை சொல்லி அவரை போற்றி வணங்கினார்கள். அதைக் கேட்ட குருநாதர், "இதை யாரிடமும் சொல்லாதீர்கள். அப்படி சொன்னால் லட்சுமி உங்களிடம் இருக்காது. நீங்கள் இதை வைத்துக் கொண்டு நேர்மையாகவும், ஆசாரங்களுடன் வாழ்ந்து துன்பங்களில் இருப்பவர்களுக்கு உதவி செய்து எல்லா இன்பங்களையும் பெற்று பிள்ளைகள், பேர பிள்ளைகளுடன் சுகமாக வாழுங்கள்" என்று ஆசிர்வதித்து அனுப்பினார். நாமதாரகா "குரு கிருபையை பெற்றவர்களுக்கு துன்பங்கள் இருக்காது. ஸத்குருவை பூஜிப்பவர்கள் கண்டிப்பாக குருவின் அருளை பெற்று வாழ்வார்கள். ஆகையால் நீயும் குருவை நம்பிக்கையுடன் உறுதியான பக்தியுடன் சேவித்து சுகமுடன் வாழ்வாய்" என்றார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 19

நாமதாரகன் சித்தமுனிவரின் பாதங்களை வணங்கி இரு கரங்களையும் கூப்பி "யோகேசுவரா அறியாமை என்ற இருளை போக்கும் கதிரவன் நீங்கள். மோகமென்னும் இருளில் தூங்கிக் கொண்டிருந்த என்னை எழுப்பி குரு லீலை என்ற அமுதத்தை பருக வைத்தீர்கள். உங்களால் நான் அறிவுள்ளவனானேன். இனி வரும் குருமூர்த்தியின் கதையை கூறுங்கள்" என்று வேண்டினான். சீடரின் வேண்டுகோளுக்கு மகிழ்ச்சி அடைந்து குரு மகிமையை சொல்லலானார்.

குருமூர்த்தி அவர்கள் கிருஷ்ணா நதிக்கரையில் இருக்கின்ற அத்திமரத்தினடியில் வசித்துவந்தார் என்று சொல்ல, நாமதாரகன் குறுக்கிட்டு 'வேதங்களில் மரங்களின் அரசன் என்றும், மும்மூர்த்திகள் வசிக்கும் மரமான அரச மரமிருக்க ஏன் சுவாமிகள் அத்திமரத்தினடியில் (ஔதம்பரம்) வசித்து வந்தார்' என்று கேட்டான். முன்பு பகவான் ஸ்ரீநரசிம்ம அவதாரம் எடுத்து இரண்யகசிபின் வயிற்றைக் கிழித்து மாலையாக அணிவித்து அவரை கொன்றாரல்லவா! அப்பொழுது பயங்கர விஷ தன்மைக் கொண்ட அரக்கனின் ரத்தம் சுவாமியின் நகங்களைப் பட்டு எரிச்சலை உண்டாக்கியது. இதைப் பார்த்த மகாலட்சுமி அருகிலிருந்த அத்தி பழங்களையும், இலைகளையும் பறித்து எரியும் நகங்களில் பூசினாள். உடனே எரிச்சல் குறைந்து சாந்தமடைந்தார். அதற்கு பகவான் சந்தோஷமடைந்து தேவியுடன் அத்திமரத்தினிடம் "நீ கல்ப விருட்சமாக புகழ் பெருவாய். எவர் உன்னை பக்தியுடன் பூஜித்து வலம் வருவார்களோ, அவர்களின் பாவங்கள் நீங்கி வேண்டியது கிடைக்கும். விஷத்தின் பாதிப்பு நீங்கிவிடும். உன்னடியில் ஜப, தவங்கள் செய்தால் அபாரமான பலனை பெருவார்கள். குழந்தைகள் இல்லாதவர்கள் குழந்தை பாக்கியம் பெறுவார்கள். இங்கு நீராடினால் கங்கையில் நீராடிய புண்ணியம் கிடைக்கும். பிரம்மஹத்தியா

தோஷங்கள் நீங்கிவிடும். உன்னிடத்தில் எல்லா தேவதைகளும், லட்சுமி சமேதமாக நானும் குடிகொண்டிருப்போம்" என்று வரங்களை அளித்தார். ஸ்ரீவிஷ்ணுவின் அருளை பெற்றதினால் ஸ்ரீகுருநாதர் அத்திமரத்தடியில் வசித்துவந்தார். இப்படி இருக்கையில் சக்தி தீர்த்தத்திலுள்ள யோகினிகள் குருநாதர் அங்கு இருப்பதை கண்டு அவரிடம் வந்து வணங்கி மத்தியான நேரத்தில் தங்கள் இடத்திற்கு அழைத்து சென்று பூஜை செய்து பிச்சை அளித்து மீண்டும் அவரிடத்திலேயே விட்டு விட்டு வந்து கொண்டிருந்தார்கள். ஸ்ரீகுருவை நதிக்கரையில் பார்த்த அமரபுரவாசிகள் இவர் பிச்சைக்கு நம் வீடுகளுக்கு வராமலிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. இவருக்கு எங்கிருந்து பிச்சை கிடைக்கிறது என்று தெரியவில்லை. ஆகையால் நமக்குள் ஒருவனை ரகசியமாக நதிக்கரைக்கு அனுப்பி அந்த ரகசியத்தை தெரிந்துகொள்ளலாமென்று ஒருவனை மறைமுகமாக நிற்க வைத்தார்கள். ஆனால் அவனுக்கோ நாம் ஒரு மகானின் ரகசியத்தை தெரிந்துகொள்ள இருக்கிறோம். இதனால் என்ன தீங்கு நேருமோ என்று பயந்து திரும்பி சென்றுவிட்டான்.

அந்த இடத்திற்கு அருகிலுள்ள வயலில் கங்கானுஜன் என்ற ஒரு விவசாயி தன் வயலை காவல் காத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் மதிய நேரத்தில் யோகினிகள் சுவாமிக்கு பூஜை செய்து அவரை அழைத்துக் கொண்டு நதியை நெருங்கிய உடன் நதி இரண்டாகப் பிளந்து வழி கொடுத்தது. இதைப் பார்த்த அவன் ஆச்சர்யப்பட்டு இன்னமும் என்ன நடக்குமென்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கையில் சிறிது நேரத்திற்கு பிறகு முன்போலவே நதி பிளந்து அதிலிருந்து ஸ்ரீகுரு மேலே வந்துவிட்டார். இதைப் பார்த்த உடனே இவன், இவர் யாரோ ஈசனுடைய அவதாரமாக இருக்கலாம். நாளை என்ன நடக்குமென்று பார்க்கலாம் என்று நினைத்தான். மறுநாள் யோகினிகள் பிளந்த நதியிலிருந்து வந்து சுவாமிக்கு பாதாபிஷேகம் செய்து பூஜை செய்து தங்களுடன் அழைத்து நதிக்கரையை அடைந்த உடன் நதி இரண்டாக பிளந்து வழி



கொடுக்கையில் அவர்கள் உள்ளே செல்லலானார்கள். இதைப் பார்த்த அவன் உள்ளே என்ன நடக்கிறதென்ற ஆவலுடன் அவர்களை மறைமுகமாகப் பின்தொடர்ந்தான். அவன் நதியின் உள்ளே சென்று பார்க்கையில் அங்கு இரத்தினங்கள் பதித்த கோபுரங்களுடன் இந்திர லோகமான அமராவதியைப்போல் சூரிய பிரகாசமாக ஒளித்துக் கொண்டிருந்த நகரத்தைப் பார்த்தான். அங்கு சுவாமியை தீபாராதனையுடன் அழைத்துச் சென்று ஓர் மண்டபத்தில் இரத்தின சிம்மாசனத்தில் அமர்த்தி சகலவித பூஜைகள் செய்து ஆகாரத்தை பிச்சை அளித்தார்கள். பிறகு ஸ்ரீகுருநாதர் திரும்பி வருகையில் கங்கானுஜனை பார்த்து "நீ யார்? இங்கு ஏன் வந்தாய்" என்று கேட்க அவன் பயத்தில் நடுங்கி, "சுவாமி என் பெயர் கங்கானுஜன். நான் அமரபுரவாசி. என் வயலை காவல் காக்கின்ற நேரத்தில் நதியில் நடந்த அற்புதத்தைப் பார்த்து நீங்கள் அந்த மும்மூர்த்திகளின் அவதாரமே தவிர வேறு யாருமில்லை என்று நினைத்து உள்ளே என்ன நடக்கிறதென்று தெரிந்து கொள்ள ஆவலுடன் இங்கு வந்தேன். இங்கே நடந்ததை பார்த்தவுடன் நான் நினைத்தது உண்மையாகிவிட்டது. தாங்கள் உலகை ஆளும் மும்மூர்த்திகளே. மூடனான என்னால் உங்களை தெரிந்துகொள்ள முடியவில்லை. எனக்கு இன்று ஜோதி சொரூபமான உங்களின் தரிசனம் கிடைத்துவிட்டது. நான் தவறு செய்திருந்தால் என்னை மன்னித்து ஆசி வழங்குங்கள்" என்று பக்தியுடன் வேண்டினான். அவன் பக்தியுடன் வேண்டியதைப் பார்த்து ஸ்ரீகுருநாதர் சந்தோஷமடைந்து அவனை தேற்றி "இன்று முதல் உன் கஷ்டங்கள் (இன்னல்கள்) தீர்ந்துவிட்டன. உன் கோரிக்கைகள் நிறைவேறும். நான் இங்கே இருக்கும் வரையில் யாருக்கும் இங்கு நடந்ததை சொல்லவேண்டாம். உனக்கு முக்தி கிடைக்கும்" என்று சொல்லி ஆசிர்வதித்தார். பிறகு ஸ்ரீகுரு அத்தி மரத்தடிக்கு செல்கையில் இவனும் பின் தொடர்ந்து அங்கு அவரை வணங்கி சென்றுவிட்டான். அன்று முதல் அவன் ஸ்ரீகுருவிடம் மிக்க பக்தியுடையவனாய், குரு சேவா மனமுடன் தன் குடும்பத்துடன் வந்து சுவாமியை சேவித்துக்

கொண்டிருந்தான். இதனால் அவன் எல்லா செல்வங்களும் பெற்று சுகமாக வாழ்ந்துக் கொண்டிருந்தான்.

இப்படியிருக்கையில் மாசி (மாக) மாத பௌர்ணமி வந்தது. அன்று அவன் ஸ்ரீகுருவிடம் 'இந்த மாசி மாதத்தில் பிரயாகை, காசி, கயையில் குளித்தால் புண்ணியம் கிடைக்குமென்று சொல்வார்கள். ஆனால் அவை எங்கிருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. அவைகளின் மகிமையை கேட்டாலே புண்ணியம் கிடைக்குமென்பார்கள். தயவு செய்து அதைக் கூறுங்கள்', என்று வேண்டினான். இதைக் கேட்ட ஸ்ரீநரசிம்ம சரசுவதி அவர்கள் "இங்கே இருக்கின்ற கிருஷ்ணா, பஞ்சநதி சங்கமம் பிரயாகைக்கு சமமானது. மற்றும் இந்த கொல்லாபுரம் 'கயை' தான். அருகிலுள்ள யுகாலயம் காசிக்கு சமமானது. இவை மூன்றும் தென்காசி, பிரயாகை, கயை என்று அழைப்பார்கள். உனக்கு இப்பொழுதே அந்த மூன்று தலங்களையும் காட்டுகிறேன்" என்று சொல்லி அவர் புலித் தோலின் மீது அமர்ந்து அவர் பாதங்களை பிடித்து கண்களை மூடச் சொன்னார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்கள் பிரயாகையை அடைந்து அங்கு நீராடி, மத்தியான நேரத்திற்கு காசிக்கு சென்று கங்கையில் நீராடி விசுவநாதரை தரிசனம் செய்து, மாலை நேரத்திற்கு கயையை அடைந்து நீராடி பொழுது சாயும் நேரத்திற்கு சங்கமத்திற்கு வந்து சேர்ந்து அங்கே இருக்கின்ற மூன்று தலங்களை தரிசனம் செய்து அத்தி மரத்தினடிக்கு வந்தார்கள். இதனால் ஸ்ரீகுருவின் மகிமை மேலும் பரவத் தொடங்கிவிட்டது. இதைக் கண்ட ஸ்ரீகுருநாதர் நாம் இனிமேல் இந்த இடத்தைவிட்டு சென்று மறைமுகமாக இருப்பதே நல்லதென்று நினைத்தார். இதை அறிந்த யோகினிகள் "சுவாமி தினமும் உங்களை சேவித்துக் கொண்டிருந்த எங்களை விட்டு செல்வது தர்மமா" என்று வேதனையுடன் வேண்டினார்கள். இதற்கு குருநாதர் அவர்களை சமாதானப்படுத்தி "நான் இங்கிருந்து சென்றாலும் இந்த அத்தி மரத்தில் எப்பொழுதும் இருப்பேன். நீங்களும் இந்த கல்ப விருட்சத்தில் இருங்கள். இங்கு என் பாதுகைகளை



பிரதிஷ்டை செய்கிறேன். மற்றும் அன்னபூரணி தேவியையும் பிரதிஷ்டை செய்கிறேன். இந்த மரத்தை, என் பாதுகைகளை, உங்களையும் பூஜிப்பவர்களுக்கு அவர்களின் பாவங்கள் நீங்கி பெரும் புண்ணியம் கிடைத்து எல்லா கோரிக்கைகளும் நிறைவேறும். இங்கு அன்னபூரணி தேவி இருப்பதால் தினமும் பிராமண அன்னதானம் நடந்து கொண்டிருக்கும். மலடிப் பெண்கள் இங்கே இருக்கும் பாபநாச தீர்த்தம், காம்மியதீர்த்தம், சித்த தீர்த்தத்தில் நீராடி ஏழுமுறை இந்த அத்திமரத்தை நீரினால் நனைத்தால் அவர்களின் மலட்டுத் தன்மை விலகி நீண்ட ஆயுளுடைய பிள்ளை பிறப்பான். இங்கு ஒரு பிராமணருக்கு அன்னதானம் செய்தால் கோடி பிராமணர்களுக்கு அன்னதானம் செய்த புண்ணியம் கிடைக்கும். இங்கு அமாவாசை, பௌர்ணமி, பொங்கல், சூரிய, சந்திர கிரகண காலங்களில் நீராடினால் விசேட புண்ணியம் கிடைக்கும். இந்த மரத்தினடியில் ஒருமுறை செய்யும் ஜப, தப, ஹோமம், ருத்ராபிஷேகங்களுக்கு கோடி மடங்கு செய்த பலிதம் கிடைக்கும். இந்த மரத்தை அடியில் அடிவைத்துக் கொண்டு சுற்றினால் எல்லாவித வியாதிகளும் நீங்கிவிடும்" என்று கூறி யோகினிகளிடம் விடைபெற்றுக் கொண்டு ஸ்ரீகுருநாதரான ஸ்ரீநரசிம்ம சரசுவதி அவர்கள் தேய்பிறை துவாதசி அன்று கந்தர்வ புரத்திலிருக்கும் பீம, அமரஜ நதிகளின் சங்கமத்திற்கு சென்றார். சுவாமி அவர்கள் எல்லா வல்லமை பெற்ற இறைவனானதினால் அவர் இந்த அத்தி மரத்தில் குடிகொண்டு இங்கு வாழும் பக்தர்களுக்கு அருளை வழங்கிக் கொண்டிருக்கிறார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 20

நாமதாரகன் சித்தமுனிவரை வணங்கி "சுவாமி ஸ்ரீகுருநாதர் கந்தர்வபுரத்திற்கு சென்றாலும் அந்த அத்திமரத்தில் இருந்து கொண்டு அருள் புரிகிறார் என்கிறீர்களே, அப்படி யாராவது குருநாதரை சேவித்து அருள் பெற்றிருக்கிறார்களா?" என்று கேட்டான்.

சித்தமுனி சந்தோஷமடைந்து "அப்பனே இங்கு சுவாமியை சேவித்து அருள் பெற்றவர்கள் நிறையப் பேர் உண்டு. அவர்களில் ஒருவர் கதையை சொல்கிறேன்." 'சிரோளா' என்ற கிராமத்தில் வேதசாத்திரம் படித்த உத்தமமான பிராமணர் இருந்தார். அவர் மனைவி பதிவிரதையும் நற்குணங்களும் உள்ளவள். அவர்களுக்கு ஐந்து மகன்கள் பிறந்து இறந்துவிட்டார்கள். ஆகையால் அவர்கள் எல்லா கடவுள்களை வேண்டியும் விரதங்கள் இருந்தும் ஒரு பலனும் கிடைக்கவில்லை. ஆகையால் இப்படி நடப்பதற்கு காரணம் தெரிந்து கொள்ள ஜோதிடரிடம் சென்று "தமக்கு எத்தனை பிள்ளைகள் பிறந்தாலும் பிழைப்பதில்லை. காரணம் என்னவென்று கூறுங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு அவர் 'அம்மா முற்பிறவியில் நீ செய்த பாவத்தினால் இப்படி நடக்கிறது. யாரொருவர் பெண்களின் கர்ப்பத்தை அழிப்பார்களோ, பசுக்களை குதிரைகளை துன்புறுத்துவார்களோ, மற்றவர்களின் பணத்தை திருடுவார்களோ அல்லது கடனாகப் பெற்று திருப்பி தராமலிருந்தாலும் அவர்கள் அடுத்த பிறவியில் குழந்தை பேறு பெறமாட்டார்கள். அப்படி குழந்தைகள் பிறந்தாலும் இறந்துவிடுவார்கள். நீ போன ஜென்மத்தில் 'சௌனக' கோத்திரரான ஒரு பிராமணரிடம் நூறு ரூபாய் கடன் வாங்கி திருப்பி தரவில்லை. அவன் பலமுறை கேட்டும் தராததால் மனமுடைந்து தற்கொலை செய்து இறந்து பிசாசாக ஆகிவிட்டான். அவன்தான் உன் குழந்தைகளை கொன்றுவிடுகிறான். செய்த பாவம் அனுபவித்தே ஆகனும்' என்று சொன்னார். இதைக் கேட்ட அந்த பெண் தான் செய்த



பாவத்திற்கு மனமுடைந்து அந்தப் பாவத்தை போக்க பரிகாரம் என்னவென்று ஜோதிடரைக் கேட்டாள். அதற்கு 'அம்மா அந்த பிராமணர் தற்கொலை செய்து இறந்துவிட்டதனாலும் அவனுக்கு பிள்ளைகள், சொந்தக்காரனும் இல்லாததால் அவனுக்கு ஈம சடங்குகள் (காரியங்கள்) செய்யவில்லை. ஆகையால் நீ அவனுக்கு ஈமகாரியங்களை செய்து அதே கோத்திர பிராமணருக்கு நூறு ரூபாய் தானம் செய்து ஒரு மாத காலம் கிருஷ்ணா நதிகரையிலுள்ள பஞ்ச கங்கா சங்கமத்தில் நீராடி உபவாசமிருந்து ஏழுமுறை அத்திமரத்திற்கு அபிஷேகம் செய்து அதை சுற்றி பூஜை செய்து ஸ்ரீகுரு பாதுகைகளுக்கும் பூஜை மற்றும் அபிஷேகம் செய்தால் ஸ்ரீநரசிம்ம சரசுவதி சுவாமிகளின் அருளைப் பெற்று உன் பாவங்கள் நீங்கி, நீண்ட ஆயுளுடைய மகன் பிறப்பான்" என்று சொன்னார். அப்பொழுது அந்தப் பெண் " அய்யா நான் மிக ஏழை. என்னிடத்தில் தானம் செய்வதற்கு பணமில்லை. ஆனால் நீங்கள் கூறியதைப்போல் ஒரு மாத காலம் அந்த புண்ணியத் தலத்தில் நியமத்துடன் சேவை செய்கிறேன்' என்று சொல்ல அதற்கு அந்த பிராமண ஜோதிடர் சம்மதித்தான். அப்பொழுது அந்த பெண் சந்தோஷத்துடன் அந்த புண்ணிய தலத்திற்கு சென்று நியமத்துடன் சங்கமத்தில் பாபநாசத்திலும், காம்மிய தீர்த்தத்திலும் நீராடி ஏழுமுறை நீரினால் அத்திமரத்தையும் ஸ்ரீகுருவின் பாதுகைகளையும் அபிஷேகம் செய்து உபவாசமிருந்து அத்திமரத்தை சுற்றி பூஜை செய்து வந்தாள். இப்படி மூன்று நாட்கள் ஆயின. மூன்றாம் நாள் இரவு கனவில் அந்த பிசாசம் தோன்றி, 'ஏ பெண்ணே நீ என் பணத்தை எடுத்துக் கொண்டு திருப்பி தராமல் இங்கு இந்தமரத்தை சுற்றி பூஜை செய்கிறாயா? என் பணத்தை திருப்பிக் கொடு. இல்லாவிட்டால் உன் வம்சத்தை நாசமாக்கி விடுவேன். உன்னையும் கொன்றுவிடுவேன்' என்று கூறி அவள் மேல் பாய்வதற்காக சென்ற பொழுது அந்த பெண் பயத்துடன் எழுந்து அத்திமரத்தின் அருகில் சென்றாள். அங்கு ஸ்ரீகுரு மூர்த்தி தோன்றி அவளை தன் அருகாமையில் அழைத்து அந்த பிசாசத்தைப்

பார்த்து "என் பக்தை ஆன இந்த பெண்ணை ஏன் துன்புறுத்துகிறாய்" என்று கேட்டார். அதற்கு அந்தப் பிசாசம் அந்தப் பெண் தனக்கு முன்பிறவியில் கடன் பட்டதையும் அதனால் அவன் பிசாசானதையும் கூறி, யோகிகள் ஆன நீங்கள் என் விரோதிக்கு புகலிடமளித்து காப்பது நல்லதில்லை என்று சொல்ல அதை கேட்ட சுவாமி கோபித்து "நீ என் பக்தர்களை துன்புறுத்தினால் நான் உன்னை தண்டிப்பேன். இவள் உனக்கு கடன்பட்டது முன்ஜென்மத்தில். ஆனால் இப்பொழுது இவள் ஏழை. ஆகையால் நான் சொன்னபடி நீ கேட்டால் உனக்கு இந்த பிசாசு ரூபம் போய்விடும். இல்லையெனில் நீ இப்படியே இருப்பாய்" என்றார். ஸ்ரீகுருவே நீங்கள் சொன்னபடி நான் கேட்பேன். எனக்கு இந்த பிசாசு ரூபம் போகும்படி செய்யுங்கள் என்று வேண்டினாள். அதற்கு ஸ்ரீகுருநாதர் இவள் பத்துநாட்கள் உனக்கு ஈமசடங்குகள் செய்வாள் என்று கூறி அவளைப் பார்த்து "அம்மா உன் சக்திக்கு தகுந்தார்போல் நீ இந்த பிரேதத்திற்கு ஈம சடங்குகளை செய்யுங்கள். அதனால் உனக்கு பிரம்மஹத்தியா தோஷம் நீங்கி நீண்ட ஆயுளுடைய பிள்ளைகள் பிறப்பார்கள். இவனுக்கு இந்த பிசாசு ரூபம் போய்விடும்" என்று கூறி முன்பு அந்த ஜோதிடர் சொன்னதைப் போலவே குருநாதரும் அத்திமரத்திற்கு பூஜைகள் செய்யச் சொன்னார். அவள் காலையில் எழுந்து சுவாமி கூறியது போலவே செய்தாள். இதனால் அந்த பிசாசு நற்கதி அடைந்தது. இவளுக்கும் பிரம்மஹத்தி தோஷம் நீங்கிவிட்டது. மீண்டும் ஒருநாள் ஸ்ரீகுருநாதர் கனவில் தோன்றி இரண்டு தேங்காய்களை அவளுக்குக் கொடுத்து "உன் விரதம் பூர்த்தி ஆகிவிட்டது. இந்த தேங்காய்களை பூஜைக்கு உபயோகித்து அதை உண்ணுங்கள். உங்களுக்கு குழந்தைகள் பிறப்பார்கள்" என்று கூறி மறைந்து விட்டார். அவள் எழுந்து பார்க்கையில் அவள் பக்கத்தில் உண்மையாகவே இரண்டு தேங்காய்கள் இருந்தன. உடனே அவள் இந்த கனவுபற்றி தன் கணவருக்கு சொன்னாள். அவர்கள் சுவாமி கூறியதைப் போல் அந்த தேங்காய்களை உபயோகித்து அத்திமரத்திற்கு பூஜை செய்து



தேங்காய்களை உண்டு தம் கிராமத்திற்கு வந்துவிட்டார்கள். குருநாதரின் ஆசியால் இரண்டு மகன்கள் பிறந்தார்கள். மூத்தவனுக்கு ஏழு வயதும் இளையவனுக்கு மூன்று வயதும் வந்தது. ஆகவே மூத்தவனுக்கு உபநயனமும், இளையவனுக்கு முடி எடுத்தல் செய்ய நினைத்து அதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்தார்கள். ஆனால் முகூர்த்தத்திற்கு முதல் நாள் மூத்தவனுக்கு பக்கவாத நோய்வந்து மூன்று நாட்கள் அவதிப்பட்டு இறந்துவிட்டான். அதைப் பார்த்த தாய் துக்கம் தாங்காமல் குழந்தையின் சவத்தின்மீது புரண்டு "மகனே குருவின் அருளால் நீண்ட ஆயுளுடைய மகன் பிறந்தான் என்று சந்தோஷமடைந்தேன். உன் மழலை சொற்கள் கேட்டு ஆனந்தமடைந்தோம். நீ பிறந்ததிலிருந்து எங்கள் கஷ்டங்களெல்லாம் தீர்ந்துவிட்டன, வயதான காலத்தில் எங்களை காப்பாற்றுவாய் என்று எண்ணினோம். ஆனால் நீ இப்படி சிறு வயதிலேயே இறந்து எங்களை அனாதைகளாக்கி சென்றுவிட்டாயே" என்று பலவிதமாக கூறி அழலானாள். அப்பொழுது அங்கு கூடியிருந்தவர்கள் அவளை பார்த்து "அம்மா விதி யாரை விட்டது. மரணம் மகான்களை, ரிஷிகளை, யோகிகளை, அவதார புருஷர்களையும் விடவில்லை. சாமானியமான மனிதர்களாகிய நாம் எப்படி தப்பிக்க முடியும். நீ இப்படி அழுவதினால் இறந்தவன் மீண்டும் பிழைப்பானா?" என்று கூறி சமாதானப்படுத்தினார்கள். ஆனால் அவளோ "ஸ்ரீகுருவாகிய நரசிம்ம சரசுவதி அவர்களின் வரத்தினால் நீண்ட ஆயுளுடைய மகன் பிறந்தான் என்று நினைத்தேன். குருவின் வரம் பொய்யாகிவிட்டது. இனி யார் அவரை நம்புவார்கள். அத்திமரத்திற்கும் பாதுகைகளுக்கும் பூஜை செய்து சுற்றி வந்தேன். அதெல்லாம் வீணாகி விட்டது. ஸ்ரீகுருதேவர் சத்தியத்தை தவறிவிட்டார். ஆதலால் நானும் இவனுடன் உயிரை விட்டு விடுவேன். பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுபடுவதற்காக உங்களிடம் சரணடைந்தேன். அதிலிருந்து காப்பாற்றி நீண்ட ஆயுளுடைய மகன் கொடுத்தீர்கள் என்று ஆசைப்பட்டேன். ஆனால் புலியினிடம் தப்பிப்பதற்காக ஓடி ஒரு கசாப்பு

கடைகாரனிடம் சரணடைந்தது போலும், பூஜிப்பதற்காக கோவிலுக்கு சென்ற பொழுது அது இடிந்து மேலே விழுந்து இறந்துவிட்டது போல் ஆகிவிட்டது. எனக்கு ஆசையளித்து நீங்கள் ஏன் என் மகனை காப்பாற்ற மாட்டீர்கள்?" என்று இரவு முழுவதும் அழுது கொண்டே இருந்தாள்.

மறுநாள் காலையில் ஊரிலுள்ள பிராமணர்கள் வந்து "நீ இப்படி அழுவதால் என்ன பயன். உன் மூர்க்கத்தை விட்டுவிட்டு குழந்தையின் சடலத்தை எரிப்பதற்கு எங்களிடம் கொடுத்துவிடு" என்று கேட்டார்கள். அதற்கு அவள் குழந்தையுடன் நானும் அக்னி பிரவேசம் செய்கிறேன் என்று சொல்லி குழந்தையை தன் மார்பில் அனைத்து கொண்டு விட்டாள். அங்கு கூடியிருந்தவர்கள் இந்த விபரீதத்தை கண்டு வியப்படைந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள் மத்தியானம் ஆகிவிட்டது. அந்த நேரத்தில் அங்கு ஒரு பிரம்மச்சாரி வேடத்தில் ஸ்ரீகுருவாகிய ஸ்ரீநரசிம்ம சரசுவதி அவர்கள் வந்து அவளை தேற்றி தத்துவ ஞானத்தை போதிக்கலானார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுரதேவதத்த!*







## அத்தியாயம் 21

"அம்மா ஏன் மூடத்தனமாக இப்படி அழுதுகொண்டு இருக்கிறாய். இந்த சம்சாரம் ஒரு நொடியானது. பிறப்பு இறப்பு சுழலில் (வட்டத்தில்) நமது உடல் பிறந்து இறந்து விடுகிறது. செய்த வினையின் படி பஞ்ச பூதங்களின் சேர்க்கையினால் உடல் ஏற்பட்டு வினை (கர்மா) தீர்ந்த உடனே பஞ்ச பூதங்கள் சென்று விடுவதனால் உடல் நாசமாகிறது. மாயாவின் மோகத்தினால் நிலை அற்ற மனித உருவங்களை மகனென்றும் மனைவி என்றும் புருஷன் என்றும் பல உறவுகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் 'சத்துவ' குணத்தினால் தெய்வத் தன்மையும் 'ரஜோ' குணத்தினால் மனிதத் தன்மையும் 'தமோ' குணத்தினால் அரக்கத் தன்மையும் பெறுகிறார்கள். செய்த வினையின் படி கர்மத்தை அனுபவிக்கிறார்கள். ஆகையால் ஞானிகள் பிறப்பினால் சந்தோஷத்தையும் இறப்பினால் துக்கத்தையும் பெறுவதில்லை. கோடி கல்பங்கள் ஜீவிக்கும் தேவர்களே செய்த கர்மாவை அனுபவிக்கிறார்கள். மனிதர்களாகிய நம்மை பற்றி சொல்ல வேண்டுமா?

ஜீவத்திற்கு உடல் புகலிடம். உயர் (ஜீவி) தேகத்தின் மேல் ஆதாரபடும். தேகம் காலத்தின் ஆதீனத்தில் இருக்கும். காலமோ கர்மத்தின் படி நடக்கும். கர்மத்தின் படி ஒவ்வொரு உடலும் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு என்ற நிலைகள் பெறுகின்றன. இப்படிப்பட்ட உடல் நிரந்தரமானது என்று எண்ணக்கூடாது. பிறப்புக்கு முன்பும், இறப்புக்கு பின்பும் இல்லாமல், வாழும் சில நாட்கள் இருக்கும் இந்த உடல் நீர்குமிழ் போன்றானது என்று நினைக்க வேண்டும். கர்மத்தின் படி சிலர் சிறு வயதிலும் சிலர் பருவத்திலும் சிலர் முதியோரானதும் இறந்துவிடுகிறார்கள். ஆண், பெண் சேர்க்கையினால் உருவான இந்த உடல் மேல்தோற்றத்திற்கு அழகாக இருந்தாலும், உள்ளே மலம், மூத்திரம், இரத்தம், மாமிசம் போன்றவற்றினால் நிரம்பி இருக்கிறது.